# ஜாமக்காரன்
# JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 5 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 3**

**MARCH 2021 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333** இந்த எண் . **SMS** உபயோகத்துக்காக மட்டும்

**0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com**


ஜாமக்காரன் JAMAKKARAN

கர்த்தருக்குள் அன்பானவர்களே,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.



இந்த நாட்கள் குறிப்பாக 40 நாள் நோன்பு நாட்கள். **பெயர் கிறிஸ்தவர்களுக்கு** அல்லது சடங்காச்சார கிறிஸ்தவர்களுக்கு மிக முக்கியமான நாட்கள் அகும். **மனம் திரும்பி இரட்சிக்கப்பட்டவர்களுக்கோ** வாழும் ஒவ்வொரு நாளும் நமக்காக **பாடுபட்டு** மரித்து உயிர்த்த இயேசு கிறிஸ்துவின் **பிறப்பு,** வாழ்ந்த வாழ்க்கை நமக்கு போதித்த உபதேசங்கள், நமக்காக **பட்ட பாடு, மரணம்** அவரின் **உயிர்த்தெழுதல்** ஆகியவற்றை நினைத்து நினைத்து **ஸ்தோத்தரிப்பார்கள்.** இப்போதும் இயேசு **உயிருள்ளவராக** இருப்பதினால் மனிதன் கட்டப்பட்ட ஆலயத்தின் கட்டிடத்தில் இயேசு இல்லை. அவர் நம் உள்ளத்தில் **இமானுவேலராய்** நம்மோடும் **நமக்குள்ளும்** அவர் **ஜீவிக்கிறார்** என்பதை நாம் ஒவ்வொரு நிமிடமும் உறுதிப்படுத்திக்கொண்டு நாம் வாழும் ஒவ்வொரு **புதிய நாட்களையும் துடங்குவதும்** அந்த நாளை ஸ்தோத்திரத்தோடு **முடிப்பதும்** மிக முக்கியம். அப்படிப்பட்ட கிறிஸ்தவன் தான் **கர்த்தரின் இரண்டாம் வருகைக்கும், தன்னுடைய மரணத்துக்கும்** மிக ஆவலோடு காத்திருப்பவனாகும்.

ஆகவேதான் இந்த குறிப்பிட்ட நாட்களில் வழமையாக தியானிக்கும் **லெந்து தியான செய்தி,** பெரிய வெள்ளி, **ஈஸ்டர்** செய்தி இவைகளை குறித்து இவ்வருடம் நான் ஜாமக்காரனில் எழுத முயற்சிக்க வில்லை.

# MARCH - 2021

- ☐ www.jamakaran.com என்ற **வெப் சைட்** வழியாக **கம்ப்யூட்டரிலும், மொபைல்** நெட் வழியாகவும் **பெப்ருவரி** மாத ஜாமக்காரனை வாசித்த பலர் பலவிதமான **விமர்சனங்களை** எழுதி எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். நாங்கள் மனதில் நாலுமாவடி **மோகன் C. லாசரஸ்** பற்றியும். **இயேசு அழைக்கிறார்** ஊழியங்களைப்பற்றியும் குறிப்பாய் **பால் தினகரன்** அவர்களைப்பற்றியும் எங்கள் மனதில் நாங்கள் இவர்களைப்பற்றி **என்ன அபிப்ராயப்பட்டோமோ** அதை நீங்கள் அப்படியே எழுதியிருக்கிறீர்கள். ஆனால் இப்படி பல பிரபலமான ஊழியர்கள் இப்படி சாட்சியிழந்து **பொய் சாட்சிகளை** விளம்பரப்படுத்தி பணம் பெருக்குகிறார்களே! என்பதை நினைக்கும்போது மனம் வேதனைப்படுகிறது. **நீங்கள் மாத்திரம்** அவ்வப்போது இவர்களின் **தவறான** வழிகளையும் தவறான உபதேசங்களையும் குறித்து எங்களுக்கு தெரிவிக்காமல் போனால் நாங்களும் **குனிந்த தலை** நிமிராதவர்களாக **ஆடுகளைப்போல அவர்கள் பின்னே** போயிருப்போமே. நன்றி.

கர்த்தர் உங்களை எங்கள் மத்தியில் ஒரே ஒரு **ஜாமக்காரனாக** நியமித்ததால் எங்களைப்போன்றவர்களுக்கு பிசாசின் தந்திரங்களை அறிய முடிந்தது. உங்கள் ஊழியத்துக்காக கர்த்தரை துதிக்கிறோம். நீங்கள் ஆரோக்கியத்தோடும் நீண்ட ஆயுளோடும் வாழ்ந்து **ஜாமக்காரன்** பணியை தொடர்ந்து நிறைவேற்றுவீர்களாக. நாங்கள் தொடர்ந்து ஜெபிக்கிறோம். இப்படி எழுதியவர்கள், தொலைபேசியில் அறிவித்தவர்கள் ஆகிய எல்லா உள்ளங்களுக்கும், அதோடு தொடர்ந்து **காணிக்கைகளாலும்** இவ்வூழியத்தை தாங்கியவர் களுக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன். தொடர்ந்து நானும் உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

- ☐ நீங்கள் பழைய வாசகர்களாக இருந்து **சில மாதங்கள்** பத்திரிகை **பெற்றுக்கொள்ளாமல் இருந்தால்** உடனே உங்கள் **விலாசம் தொ**லைபேசி எண் ஆகியவைகளை குறிப்பிட்டு எனக்கு எழுதினால் உடனே **Speed Post**ல் உங்களுக்கு ஜாமக்காரன் பத்திரிகைகளை அனுப்பி வைப்போம்.

### ஜாமக்காரனின் கடினமான பணி

1969ம் வருடம் முதல் ஜாமக்காரனில் எழுதும் என் எழுத்துப்பணி மூலம் என்னை ஆதரிப்போர் என்னை புரிந்துகொண்டவர்களைவிட என்னை **வெறுத்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகம்.**

நிறையபேர் சகோ. **மோகன் C. லாசரஸ்** அவர்களை நீங்கள் **பிசாசின் பிள்ளைகள். அந்தி கிறிஸ்துவின் ஆட்கள்** என்றெல்லாம் குறிப்பிடுவது உங்களை நேசிக்கும் எங்களைப் போன்றவர்களுக்கு சகிக்க முடியவில்லை. என் கணவருக்கு ஜாமக்காரன் பத்திரிகையை பார்க்கவே பிடிக்கவில்லை என்கிறார். நானும் **என் தாயார்** மட்டுமே உங்கள் பத்திரிகையை வாசிக்கிறோம். இப்படி **தாக்கி எழுவதை** நிறுத்தக்கூடாதா? என்று இவர்களைப்போல நின்றைய பேர் எழுதுகிறார்கள்.

கவனியுங்கள் ! தவறான **உபதேசத்தையும்** பொய் **சாட்சிகளையும்** மேடையில் அறிவித்து **மக்களை ஏமாற்றுவது** கர்த்தருடைய ஊழியத்தில் **பெரிய பாவம்** அல்லவா! **பொய்யை** பொய் என்று சொல்லாமல் **பூசி மொழுக** சொல்லுகிறீர்களா?

தமிழ்நாட்டில் **காட்பாடிக்கு** அருகே உள்ள **வெல்லூரில்** அந்த காலத்தில் அமெரிக்க **பொய்** ஊழியர் ஒருவரான **வில்லியம் பிரன்ஹாம்** என்பவரையே அவர்தான் **கர்த்தர்** என்று கூறும் **கள்ள உபதேச சபைகள்** வெல்லூரை சுற்றி பெருக ஆரம்பித்தன. **வெல்லூரில் பாலாறு பாலத்தில் பிரன்ஹாம் வருகிறார்** என்று மிகப் பெரிய எழுத்தில் எழுதியிருந்தார்கள். அவர்களுடைய சபைக்கு C.S.I. பெந்தேகோஸ்தே சபை மக்கள் யாவரும் போக ஆரம்பித்தனர்.

உடனே சகோ. R. ஸ்டானலி (BYM) அவர்கள் சில விசுவாசிகளோடு இணைந்து இவைகள் **கள்ள உபதேசம் என்று துண்டு பிரதி** அச்சிட்டு ஒவ்வொரு **கிறிஸ்தவ சபைகளில்** சென்று வினியோகம் செய்தனர். அதன் விளைவாக உடனே மாற்றம் நிகழவில்லை என்றாலும் கொஞ்ஜ கொஞ்ஜமாக மக்கள் அந்த கள்ள உபதேச சபையலிருந்து விலகினர். இத்தனை வருடங்கள் கழிந்தாலும் ஒரு சிறு கூட்டம் அந்த கள்ள உபதேசத்தை நம்புகிறவர்கள் இன்னும் வேலூரில் உண்டு. மேலும் அவர்களுக்கு வெளிநாட்டிலிருந்து பெரும் பணத் தொகை வருகிறபடியால் **வில்லியம் பிரன்ஹாம்** சம்பந்தமாக அவரின் பழையகால பிரசங்கங்களை அச்சிட்டு கட்டுக்கட்டாக இலவசமாக வினியோகிக்கிறார்கள். நான் **வில்லியம் பிரான்ஹாம்** புத்தகங்கள் வந்தால் **குப்பை தொட்டியில்** போடாமல் மற்றவர்கள் அதை எடுத்து **படிக்க முடியாதபடி** துண்டுதுண்டாக கிழித்து போடுவேன். வாசிக்கிற நீங்களும் வாசிக்கிற எந்த பத்திரிகையானாலும், ஜாமக்காரன் பத்திரிகையானாலும் உங்களுக்கோ, மற்ற யாருக்கோ அதில் உள்ள செய்திகள் ஆவிக்குரிய ஜீவியத்துக்கு தடையாக இருக்குமானால் அல்லது மற்றவர்களுக்கு அது இடறலை உண்டாக்கும் என அறிந்தால் துண்டு துண்டாக கிழித்து போட்டுவிடுங்கள்.

அதே வழியில் தான் **மோகன் C. லாசரஸ்,** பால் தினகரன், **எசேக்கியேல் பிரான்ஸிஸ், ஆலன்பால், ஸ்டீபன்**, மரித்த **விக்டர்ஞானராஜ்,**Trichy, சகோ.**ஆனந்தஸ்ரா,** Trichy, சகோ. **ஆல்வின் தாமஸ்** ஆகியவர்களைப்பற்றியும் இவர்களின் **பொய்யான சாட்சிகளைப்** பற்றியும் **தவறான உபதேசங்கள்** இவர்கள் எழுதும் பத்திரிகைகள் கிறிஸ்தவர்களை கெடுக்கும் என்பதற்காக இவர்களைப் பற்றியும் ஜாமக்காரனின் எழுதினேன்.

கொரோனா கிருமி தாக்குதல் தொடங்கும்முன் 2019ம் வருடம் துண்டு பிரதியிலும் Whatsappயிலும் **வாலிபர்கள் எச்சரிக்கையாக இருங்கள், பெற்றோர்கள் இவர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள்** என்று எழுதியிருந்தார்கள். கீழ்காணும் **வாலிபர்கள்** நடத்தும் **கூட்டங்களுக்கோ.** அவர்கள் நடத்தும் **ஆராதனைக்கோ** போகாதீர்கள். பெற்றோர்களே உங்கள் வாலிப பிள்ளைகளை இவர்களிடம் அனுப்பாதீர்கள் என்று தலைப்பிட்டு எழுதியிருந்தது. **சகோ.ஜெபராஜ், சகோ. ஆல்வின் தாமஸ், சகோ. ஜவஹர் சாமுவேல்** அவர்களின் **மகன்** AG சபை (சென்னை) **பாஸ்டர் D. மோகன்** அவர்கள் **மகன்** நடத்தும் **ஆங்கில ஆராதனை** ஆகிய இடங்களுக்கு உங்கள் வாலிப பிள்ளைகளை அனுப்ப வேண்டாம். இவர்கள் ஸ்டேஜில் ஆடுகிற ஆபாசமான ஆட்டம் பாவ இன்பத்தை கொடுக்கிறபடியால் அவர்கள் பாடல்களுக்கு மயங்கி **வாலிப பெண்களின்** கூட்டம் இவர்கள் நடத்தும் கூட்டங்களுக்கு அலை அலையாக செல்கிறார்கள். அங்கு நன்றாக **ஆடலாம், நடனம் ஆடலாம்,** அவர்கள் பாடல் **ஆட்டங்கள்** மெய் மறக்கச் செய்கிறது.

**பாஸ்டர் D. மோகனின் மகன்** மாலையில் நடத்தும் **ஆங்கில ஆராதனைக்கு** போய் பார்த்தால் போதும். பரிசுத்தாவியானவர் பிரசன்னம் அங்கு இருக்காது. **வாலிப பெண் பிள்ளைகளோடு** பாஸ்டர் மகனை இணைத்து பல கிசு கிசு எழும்பி அது பூதாகாரமாக வெடித்தும் **பாஸ்டர் D. மோகன் அவர்கள்** தன் **மகனை கண்டிக்காததது** ஏன் என்று அவருடைய சபை கேட்கிறார்கள்.

நல்ல வேதாகம பண்டிதர் என்ற பெயர் பெற்ற பாஸ்டர் **சாம் P. செல்லதுரை** அவர்கள் மேடையில் இருக்கும்போதே மகன் **ஜீவன் செல்லதுரை** கூட்டத்தில் **நடனமாட விரும்புகிறவர்கள் ஆடலாம்** என்கிறார். ஆனால் பாஸ்டர் தன் மகனை கண்டித்ததாக தெரியவில்லை. அவர் அதை உற்சாகப்படுத்துகிறார் என்றுதானே அதற்கு அர்த்தம்.

இப்படி நான் பல தவறுகளை சுட்டிக்காட்டி கண்டித்து எழுதுவது பெரும்பாலானவர் களுக்கு பிடிக்கவில்லை. ஆனால் வாலிப பிள்ளைகளையும், வருங்கால சந்ததியையும் எச்சரித்து காப்பாற்ற வேண்டியது என்னைப் போன்றோர்க்கு **கடமை அல்லவா !**

பவுல் கூறுகிறார் **சத்தியத்தை நான் சொன்னதினால் உங்களுக்கு சத்துருவானேனோ,** கலா.4:14 **இயேசு கிறிஸ்து** இப்படி கண்டித்து கடினமாக எச்சரித்து பிரசங்கித்தபோது **உங்கள உபதேசம்** எங்களுக்கு **இடரலாக இருக்கிறது** என்றபோது அதற்கு நான் ஒன்னும் செய்ய முடியாது என்று கூறுவது போல் போய்விட்டார்.

**பெருபாலானவர்கள்** நேசிக்கிற, **நம்புகிற** தெய்வ தூதனுக்கு **சமானமாய்** நம்புகிற **மோகன் C. லாசரஸ்** போன்றவர்களை பற்றி நான் ஜாமக்காரனில் எழுதும்போது இயேசு வாழ்ந்த காலத்தில் இருந்த அதே **முறுமுறுப்பு இப்போதும் உண்டாகிறது.** மத். 15: 12-14, நீங்கள் **மோகன் C. லாசரஸ்** பற்றி எழுவது எங்கள் ஆவிக்குரிய ஜீவியத்துக்கு **இடரலாக இருக்கிறது**. உங்கள் ஜாமக்காரன் வாசித்த பிறகு சத்தியம் TVயில் **வாங்க ஜெபிக்கலாம்** நிகழ்ச்சியில் சகோ. மோகன் **C.** லாசரஸ் ஜெபிக்கும்போது எப்போதும்போல் எங்களால் **அவரோடு சேர்ந்து** ஜெபிக்க முடியவில்லை. உங்கள் ஜாமக்காரன் **எங்களுக்கு மிகவும் இடரலாயிற்று** என்றார்கள். இயேசு சொன்ன பதில்தான் உங்களுக்கும் சொல்லுகிறேன் **அவர்களை விட்டுவிடுங்கள்!** இனி உங்கள் இஷ்டம்போல் அவரோடு இணைந்து ஜெபிக்கலாம்.

அவர்கள் குருடர்கள், **குருடருக்கு வழி காட்டுகிற குருடராயிருக்கிறார்கள்** குருடனுக்கு **ஒரு குருடன்** (ஊழியக்காரன்) வழி காட்டினால் இருவரும் குழியிலே விழுந்து பேவார்களே! அந்த நிலை உங்களுக்கு வேண்டாம் என்பதற்காக எழுதுகிறேன்.

இதுவரை நான் மேலே குறிப்பிட்ட ஊழியக்காரர்களைப்பற்றி எழுதியதில் **எது பொய்யானது,** எது **வேத வசனத்துக்கு எதிரானது. நான் பொய்** பேசினேனா? **அவர்கள் பொய்** பேசினார்களா? வேத வசனத்தோடு ஒப்பிட்டு பார்த்து எனக்கு எழுதுங்கள்.

- ☐இந்தியாவில் **10 பணக்காரர்களில்** ஒருவர்தான் **Dr. பால் தினகரன்** இந்த செய்தி **ஆங்கில பத்திரிகைகளின்** வந்தபின்தான் **அவர் தகப்பனாரும்**, என் நண்பருமான **சகோ. DGS தினகரன்** அவர்கள் **மரித்துப்போனார்.** அவர் **சவ சரீரத்தை** வைத்துக்கொண்டு **பால் தினகரன்** அழுகையோடு **பேசினதை** கோடிக்கணக்கானவர் **வீடியோவிலும்** TVயிலும்

**கண்டார்கள்,** அப்போது **பால்** சொன்னார். என் தகப்பன் **இறந்தவுடன்** என் **கர்த்தரிடத்தில் கதறி அழுதேன்.** நான் என்ன செய்வேன்? **சாவுக்கு ஏராளமான** ஆள் கூட்டம் லட்சக்கணக்கில் வந்து சேர்வார்களே! அதற்கு ஆகும் அடக்க ஆராதனை **செலவுக்கு நான் என்ன செய்வேன்?** அடக்க ஆராதனை **செலவை எப்படி நான் சமாளிப்பேன்** என்று **அழுது முடித்து** அதற்கு பிறகு தான் இங்கு வந்தேன் என்று அவர் கூறி அழ அந்த லட்சக்கணக்கான கூட்டம் நெகிழ்ந்து போனது. பாவம் **சிறுவன் பால் தினகரன்** அடக்க ஆராதனை செய்ய **பணத்துக்கு எங்கு போவான்** என்று கூறி நெகிழ்ந்து போனார்கள். இந்த அனுதாபத்தை சம்பாதிக்கத்தான் **பணத்துக்கு நான் எங்கே போவேன்** என்று பால் கதறினார்.

**இந்தியாவின்** 10 **பெரிய பணக்காரர்களில்** ஒருவர் ஒரு **ஆனாதை பிணத்துக்காக பரிதவிப்பது** போல் **ஒரு சீன் காட்டினார்** பாருங்கள்! **சவப்பெட்டியை** காண **வரிசையில் வந்தவர்கள்** அத்தனை பேரும் **சவப்பெட்டிக்கு** அருகில் **உட்கார்ந்துள்ள பால்** அவர்களுக்கு **ஆறுதல்** கூறும் வன்னமாக அவர் தோளை தட்டி கைகளைபிடித்து **கையில் பணக் கவர்களையும்** கவர் இல்லாதவர்கள் ரூபாய் நோட்டுகளையும **கத்தை கத்தையாக பால் தினகரன் கையில்** கலியாணத்துக்கு **மொய் பணம்** தருவார்களே அதுபோல் கை நிறைய கொடுக்க பேண்டின் இரண்டு பாக்கெட்டுகளும் நிறம்பி வழிய உடனே நம்பிக்கை உள்ள **இரண்டு நபர்கள்** பாலின் அருகே நிற்க அவர்கள் திருமணத்தில் **மாப்பிள்ளைக்**கு கிடைக்கும் பரிசு பொருட்களையும், கவர்களையும் வாங்கி வைப்பதற்கென்று **நிற்பதுபோல்** நின்றார்கள். அந்த **மரண வீட்டில் அன்று சேர்ந்த பணம்** பல கோடிகள் இருக்கும். அதைப் பார்த்துக்கொண்டிருந்த எங்களுக்கு பழைய நண்பரின் மரணம் துக்கத்தை கொடுத்தாலும் பால் தினகரனின் அழுகை செய்தி வெருப்பையும், கோபத்தையும் உண்டாக்கியது. உலகெங்கிலும் 200 வங்கியில் நிறைந்து கிடக்கும் பணத்துக்கு சொந்தக்காரருடைய அன்றைய அழுகையில் நடிகர் திலகத்தையும்மிஞ்சி விட்டார் என்று அறிய முடிந்தது.

இப்படிப்பட்ட மாய்மால அழுகையை நீங்கள் கேட்டதுண்டா? இப்படி பகிரங்கமாக இவைகளைக் குறித்து சகோ. தினகரன் மரித்து அடக்கம் பண்ணப்பட்ட வாரமே **ஜாமக்காரனில்** எழுதினேன். இது எ**ன்ன சாதாரண பொய்யா?**

இப்போது **பாஸ்போர்ட்** முடக்கப்பட்டது. **126 கோடி, 5 கிலோ தங்கம்** இவற்றிற்கு வருமான வரித்துறையினர் விசாரனையில் அவரும் அவருடைய **ஆடிட்டர்களும்** கொடுக்கும் **கணக்கு சரியாக இருந்தால்** மட்டுமே பால் தினகரனின் குடும்பம் **இந்தியாவை விட்டு** வெளிநாடுகளுக்கு செல்ல முடியும் அங்கு மாயையான **ஜெப கோபுரங்கள்** பார்க்கவும் அங்கு கலக்ஷனான டாலர்களை இந்திய பணமாக மாற்ற அவர் பயனப்பட முடியும்.

இவ்வளவு விஷயங்கள் எழுதிய என் மேல் **மான நஷ்ட** வழக்கு போட மாட்டார்களா? என்று பலர் எனக்கு எழுதும்போது கூடவே ஜாக்கிறதை டாக்டர். சிலர் ஜாக்கிறதை பிரதர் உங்களை **நினைக்கும்போது** எங்களுக்கு **பயமாக** இருக்கிறது என்று எழுதி எனக்காக விசேஷ ஜெபம் ஏறெடுக்கிறாம் என்றும் எழுதுகிறார்கள். எழுதிய ஜெபித்த எல்லாருக்கும் நன்றி கூறுகிறேன்.

மேலே குறிப்பிட்ட பயப்படும் அளவு உள்ள எதிர்ப்புகளை பல வருடங்களுக்கு முன்பே நான் எதிர்பார்த்ததுதான். **ஆதாரங்கள், பேப்பர் கட்டிங், பழைய செய்தி தாள்கள்** அனைத்தையும் **தயார் செய்து அதை** கர்த்தர் முன் வைத்து இதில் **தவறான செய்திகள்** எதுவும் தவறியும் ஜாமக்காரனில் எழுதிவிடக்கூடாது கர்த்தாவே! என்று ஜெபத்து அதன்பிறகுதான் ஜாமக்கானில் வெளியிடுகிறேன்.

அந்த **பொய்யர்களை** கணக்கு கேட்கும் கர்த்தர் அவைகளைக்குறத்து எழுதிய **என்னையும்** கண்டிப்பாக **கணக்கு கேட்பார்** என்பது எனக்கு தெரியும்.

சிலர் மோகன் C. லாசரஸ்ஸிடம் இப்பட உங்களைப்பற்றி மோசமாக எழிதும் டாக்டர் வாயை மூட வேண்டும். நீங்கள் ஏன் அமைதியாக இருக்கிறீர்கள் ! என்று கேட்டதாக அறிந்தேன். சகோதரனின் குரு **DGS தினகரன்** அவர்களின் வழியை தான் அவரும் பின்பற்றுகிறார். Dr. பாலுடைய வழியை மோகன் பின்பற்றவில்லை. பால் வழி வேறு, அதைப்பற்றி காருண்யா யூனிவர்சிட்டியை விட்டு பாதியில் **ராஜீனாமா செய்து விட்டு** வெளியேறிய காருண்யா யூனிவர்சிட்டி **டீன் அவர்களை** கேட்டால் விவரம் அறியலாம். பால் தினகரன் அனுகும் வழி மிக வித்தியாசம்.

ஆனால் **மோகன் C. லாசரஸ்** அப்படியல்ல. இப்போது பரிசேயர்களைப்பற்றி சீஷர்கள் இயேசுவிடம் கூறியதற்கு இயேசு கூறின பதிலை நான் எழுதினேனே! அதே பதிலை **உல்டா செய்து** இயேசு சீடர்களைப் பார்த்து கூறியதைப்போல் **அவர்களை விட்டுவிடுங்கள்** என்ற பதில் தான் வரும். நீங்கள் எத்தனை கடிதம் எழுதினாலும் ஒரு பதிலும் அவர்களிடமிருந்து பெற முடியாது. வாசகர்களுக்கு மட்டும் **அறிவிக்க** வேண்டியதை **எச்சரிக்க** வேண்டியதை செய்து முடித்துவிட்டேன்.

**- Dr. Pushparaj**

# ONLINE BANKING (NEFT)

**Dr. M.G.E. PUSHPARAJ**, **SALEM - 636 005. INDIA**

**STATE BANK OF INDIA** (SALEM-1970)

**A/C No: 10764116842** SWIFT CODE - SBININBB637- 10764116842

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

**A/C No: 1219101013622.** SWIFT CODE - CNRB0001219 -1219101013622.

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.



# சண்டைக்காரி

Dr. **லில்லியன் ஸ்டான்லி,** M.B.B.S., D.C.H.

**ஜாமக்காரன் :** Dr. லில்லியன் ஸ்டான்லி அவர்கள் அவர் கணவர் சகோ. R.ஸ்டான்லியைப்போல் **ஆவிக்குரிய செய்திகளை எழுதவும்**, பிரசங்கிக்கவும் **சிறப்பு தாலந்து பெற்றவர்.** 1968ம் ஆண்டு என்று நினைக்கிறேன், சகோதரி லில்லியன் அவர்கள் வெல்லூர் CMC மெடிக்கல் காலேஜ்ஜில் படித்துக் கொண்டிருக்கும்போது ஞானஸ்நானத்தைப்பற்றி தெளிவு உண்டாக அவரோடு பேசும்படி கேட்டுக் கொள்ளப்பட்டேன். அவர் அறைக்கு சென்று அவரோடு பேச தொடங்கியதும். டாக்டர் ! என்னிடம் இதை குறித்து உங்களை பேச சொல்லி யார் அனுப்பியிருப்பார் என்பது எனக்கு தெரியும் என்று ஆரம்பத்திலேயே மிகவும் ஞானமாக பேச்சை ஆரம்பித்தார். படிப்பு முடித்து சகோ. R. ஸ்டான்லி அவர்களை திருமணம் முடித்து தன் கணவரோடு சேர்ந்து ஊழியம் செய்ய தொடங்கியபோதே **வேத புஸ்தக ஞானத்தில்** Dr.லில்லியன் மிகவும் **தேறிவிட்டதையும்** வெளிப்படையாகவும் Bold ஆகவும், **பிரசங்கிக்கும்** தைரியமும் எழுதும் துணிவும் அவருக்கு ஆவியானவர் கொடுத்துவிட்டார் என்பதை அவர் எழுதும் கட்டுரைகளிலிருந்து அறிந்து கொண்டேன்.

ஜாமக்காரனில் குறிப்பாக **குடும்ப பெண்கள்** சந்திக்கும் பிரச்சனைகளையும், **வாலிப பெண்கள்** சந்திக்கும் பிரச்சனைகளையும் அதற்கான ஆவிக்குரிய ஆலோசனைகளையும் அவர் பாணியில் எழுதியதை ஜாமக்காரன் வாசகர் குடும்பங்களும் வாசித்ன் அறிந்து பிரயோஜனப் படுத்திக்கொள்வது நல்லது என்பதற்காக இவைகளை வெளியிடுகிறேன். வீட்டுக்கு வீடு **வாசல்படி** என்ற பழஞ்சொல்படி விசுவாசிகளானாலும், ஊழியக்காரர்களானாலும் வீட்டில் சந்திக்கும் பிரச்சனைகள் ஒன்றே. கிறிஸ்தவ **குடும்பங்கள் உடைய கூடாது** என்ற பாரம்கொண்டு **அவர் உத்தரவு பெறாமலே** இதை வெளியிடுகிறேன்.



Dr. **லில்லியன் ஸ்டான்லி,** M.B.B.S., D.C.H.

## சண்டைக்காரி

**நூறு வேட்டிகள்** ஒன்றாயிருந்தாலும் **இரண்டு சேலைகள்** ஒன்றாயிராது என்பது உண்மை தோய்ந்த பழமொழி. **ரெபேக்காளுக்கும்** அவளது **மருமகளுக்கும்! அன்னாளுக்கும் பெனின்னாளுக்கும்! எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும்!** ஓயாத சண்டை! **ஏன் சண்டைபோடுகிறோம்** ? சண்டையின்றி சமாதானமாய் வாழ்வதெப்படி ?

முதலாவதாக, **சண்டை** மோசமான **பாவம்** என்பதை நாம் உணர வேண்டும். நம்மில் பலரும் குற்றவுணர்வின்றியே **சண்டைபோடுகிறோம். மாம்சத்தின் செயல்கள்** வெளியரங்கமாயிருக்கின்றன. அவையாவன: **பகைகள்**, விரோதங்கள். **வைராக்கியங்கள்,** கோபங்கள், **சண்டைகள்,** பிரிவினைகள், மார்க்க பேதங்கள் பொறாமைகள் **கொலைகள்** இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. (கலா.5:19,20,21)

சண்டை தேவனுடைய இராஜ்யத்திற்கு வெளியே நம்மை நிறுத்தக்கூடிய **பாவம்** என்று உணர்ந்திருக்கிறோமா? நம்மில் பலர் குரோதத்தினாலும் பொறாமையினாலும், கொலையினாலும் **வாக்கு வாதத்தினாலும்** நிறைந்தவர்களுமாய் இருக்கிறார்கள்... இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் **மரணத்திற்குப்** பாத்திரராயிருக்கிறார்கள். (ரோ. 1:29-32)

**எத்தியோப்பியா** தேசத்துப் பெண்ணை **மோசே** விவாகம் பண்ணியிருந்தபடியினால் **மிரியாமும் ஆரோனும்** மோசே விவாகம் பண்ணின **எத்தியோப்பியா** தேசத்துப் பெண்ணினிமித்தம் அவனுக்கு விரோதமாய்ப் பேசி : கர்த்தர் **மோசேயைக்கொண்டு** மாத்திரம் பேசினாரோ ? **எங்களைக்கொண்டும்** அவர் **பேசினதில்லையோ** என்றார்கள், (எண்.12:1,2) சகோதர சகோதரிகள் சண்டையிடுவதற்கு மணியான எடுத்துக்காட்டு இது. **மிரியாமின்** இதயத்தை **பொல்லாத பொறாமை** கவ்விக்கொண்டிருந்தது. **மோசே தலைவானாயிருந்தான்.** ஆனால் அவன் குழந்தையாயிருந்த போது அவனது ஜீவனைக் காத்தது அவளல்லவோ? அவளும் முன் சென்று மக்களை நடத்தவில்லையோ ? (மீகா 6:4) ஆனாலும் இளையவனான **மோசேயின்** பேர்ப்புகழை **அவளால் தாங்கிக்கொள்ள** முடியவில்லை. இப்போது இவர்களுக்குள் பெருமை **சுயநலமெனும்** குட்டிப்பிசாசுகள், ஆன்மீகமென்னும் போர்வைக்குள் ஒளிந்திருப்பதைக் காண முடிகிறதல்லவா ?

**மிரியாமின்** கொதிப்பிற்கு வேறொரு காரணமுமுண்டு, தன் **நாத்தனாரைக்** குறித்த **பொறாமை** தன் சகோதரனை அவளுக்கு விட்டுவிட இன்னும் மிரியாமுக்கு மனம் வரவில்லை, மோசேயும் தானும், ஆரோனும் மக்களை எகிப்திலிருந்து வெளியே அழைத்து வருகையில் அப்போது **மோசேயின் மனைவி அங்கு இல்லை**. இம்மூவரே கதாநாயகராயிருந்தனர். இப்பொழுது திடீரென்று தன் வாழ்க்கையின் குறுக்கே நுழையும் **இவள் யார்** ? இனி இவளல்லவா மோசேயின் கூடாரத்திலிருப்பாள் ? இனி மோசே தன்னோடும் ஆரோனோடும் எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்ளாமல் மோசே யூத **குலத்தவளல்லாத** இந்தப் பெண்ணோடல்லவா உட்கார்ந்து உட்கார்ந்து பேசுவான் ? அவளோடல்லவா மோசே ஒன்றாக வெளியே செல்வான் ? மிரியாம் **அவளுக்கு அடுத்தபடிதான்.** இந்த ஏமாற்றத்தோடு **இனவெறியும்** சேர்ந்து அவளது இழப்பை பெரிதுப்படுத்தியதால் சினம் பொங்கி **சீறினாள்.** மிகவும் நெருக்கமாக வாழும் குடும்பங்களில் **திருமணம்** என்பது **ஓர் இழப்புதான்.** ஆனால் **புதிய நபர் மீது** அன்பை சொரிவதினால் ஒருவரை இழப்பதை தவிர்த்து ஒருவரை கூட்டிக்கொள்ளலாமே !

உங்கள் சொந்த **சகோதரனோடோ** சகோதரரியோடோ **சண்டையா** ? பெற்றோர் **உங்களை அவர்களோடு ஒப்பிட்டு** எரிச்சல் மூட்டலாம். **பாரபட்சம்** காட்டலாம்.உங்கள்

சகோதரனோ சகோதரியோ **கூடுதல் தாலந்து** பெற்றவராயிருக்கலாம், அல்லது உங்கள் சகோதரனது கவனம் உங்களை விட்டு **தன் மனைவி பக்கமாய் திரும்பியிருக்கலாம்.** என்னவானாலும் சரி. **பொறாமை** என்னும் **பாம்பு** உங்கள் இதயத்தைப் பின்னி நெரிக்க இடமளிக்காதீர்கள். பிறர் உன்னை **மதிப்பதில்லை**, உனக்குக் கொடுக்கவேண்டிய இடத்தைக் கொடுப்பதில்லை என்று அடியாழத்திலிருந்து சுருக் சுருக்கென்று கடித்துக்கொண்டிருக்கும் **பெருமை** எனும் மூட்டை பூச்சியை நசுக்கிவிடுங்கள். **அகந்தையினால்** மாத்திரம் **வாது பிறக்கும்** (நீதி 13:10) **மிரியாம்** மோசேயின் மனைவியைக் காட்டிலும் வரம் பெற்றவள், காரிய சித்தியுள்ளவள், தனது **தீர்க்கதரிசன வரத்தை** வளர்ப்பதிலும் தலைமைத்துவத் தகுதிகளை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தியிருந்தால் அவளது மரணம் சம்பூரணமா யிருந்திருக்கும். ஆனால் சீக்கிரமாய் சாவூர் சென்றுவிட்டாள் (எண் 20:1) பெருமை, பொறாமை பகை, சுயநலத்தினால் தூண்டப்பட்டு **சண்டையெனும்** பாவத்திற்குப் **பலியான தலைவியின் முடிவு அதே.**

**மிரியாம்** மோசேக்கு விரோதமாகப் பேசினாள். கர்த்தர் அதை கேட்டார், **சண்டையில்** நீங்கள் வீட்டில் வசை மொழியும் ஒவ்வொரு வார்த்தையையும் **ஆண்டவர் கேட்கிறார்.** எச்சரிக்கை! அடுத்த வசனமே **மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணம் உள்ளவனாயிருந்தான்** என்று சொல்லுகிறது. மோசேயிடம் பர்வதம் போன்ற பொறுமையில்லாமல் போயிருந்தால் அங்கே **அடிதடி சண்டைதான்** நடந்திருக்கும்.

**சண்டையின் ஆரம்பம்** மதகைத் திறந்துவிடுகிறது போலிருக்கும். ஆதலால் **விவாதம் எழும்புமுன்** அதை விட்டுவிடு. (நீதி 17:14) மிரியாம் மதகைக் திறந்துவிட்டாள். **மோசே அதை விட்டு விட்டான்.** மோசே அதை பெரிதாக்கவில்லை. ஆனால் **கடவுள்** அதை விடாமல் **அவனுக்காகச் சண்டையிட்டார்.** மிரியாம் **குஷ்ட ரோகியானாள்.** ஆம் **நாம் சும்மா நின்றால்** கர்த்தர் நமக்காக யுத்தம் பண்ணுவார். (2 நாளா. 20:17) **மோசே** கர்த்தர் என் நீதியை நிலைநாட்டினார் எனப் பூரிக்கவில்லை. தேவனை நோக்கி **அவளுக்காகக் கெஞ்சினான்,** சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள். (மத். 5:9) உங்கள் ஆவி கோபத்தால் முறுக்கிக்கொண்டு எழும்போதெல்லாம், உங்கள் தேவனாகிய கர்த்தர் **மிரியாமுக்குச்** செய்ததை நினைத்துக் கொள்ளுங்கள். (உபா. 24:9)

**மோசேக்கு** சமாதான குடும்ப வாழ்கையும் கிடையாது. **மீதியான்** தேசத்து சிப்போராளை மணந்தான். **நான் அந்நிய தேசத்தில் பரதேசியாய் இருக்கிறேன்.** என்று சொல்லி தன் முதல் மகனுக்கு **கெர்சோம்** என்று பேரிட்டான். (யாத் 2:22) இதிலிருந்து மோசே **தன் சொந்த வீட்டிலேயே** அந்நியனைப் போலிருந்தான் என அறியலாம்.

**யோசேப்பும்** ஆஸ்நாத்து எனும் **வேறு ஜாதி (இனம்) பெண்ணைத்தான்** மணந்தான். ஆனால் தன் முதல் மகனுக்கு **மனாசே** என்று பெயரிட்டு, **என் வருத்தம்** யாவையும் என் தகப்பனுடைய குடும்பம் அனைத்தையும் **நான் மறக்கும்படி** தேவன் பண்ணினார். என்றான். (ஆதி. 41:51) என்னே வேறுபாடு பார்த்தீர்களா?

மனைவியானவள் ஒருவனது வாழ்வில் **பெரும் வித்தியாசத்தை** உண்டு பண்ணலாம். மோசே **தன் மனைவியோடே** ஏன் ஒன்றுபட முடியவில்லை? அவனது வாழ்க்கையில் அவன் வீட்டு சில சன்னல்கள் வழியே நாம் எட்டிப்பார்ப்போம். தேவன் **மோசேயை** எகிப்திற்கு போகச்

சொன்னவுடனே குடும்பமாக **உல்லாசமாகப் போகத்தான் எண்ணினான்**. அப்பொழுது மோசே தன் மனைவியையும் தன் பிள்ளைகளையும் கழுதையின்மேல் ஏற்றிக்கொண்டு எகிப்து தேசத்துக்கு திரும்பினான். (யாத் 4:20) **வழியிலே தங்கும் இடத்தில்** கர்த்தர் **மோசேயைக் கொல்லப் பார்த்தார்.** கர்த்தர் மோசேயை கொல்லப் பார்த்தன் காரணத்தை **சிப்போராள் விளங்கிக்கொண்டாள்**. அப்பொழுது **சிப்போராள்** கருக்கான ஒரு கல்லை எடுத்து, தன் புத்தரனுடைய நுனிதோலை அறுத்து அதை அவன் கால்களுக்கு முன்பாக எறிந்து நீர் எனக்கு **இரத்த சம்பந்தமான புருஷன்** என்றாள். **அதையே மறுபடியும் சொன்னாள்.** (யாத்4:2-26) அவளது வார்த்தைகளில் **கோபக் கனலை** காணமுடிகிறதா? **கோபக்காரன் சண்டையை எழுப்புகிறான்.** நீடிய சாந்தமுள்ளவனோ **சண்டையை அமர்த்துகிறான்.** (நீதி 15:18, 14:29) மோசே நீடிய சாந்தமில்லாதவனாயிருந்திருந்தால் அன்று கொலையே விழுந்திருக்கும்.

கர்த்தர்: **மோசேயை கொல்ல எத்தனித்தபோது** சிப்போராளுக்கு **அதன் காரணம் உடனடியாய்ப் புலப்பட்டது.** அவள் புறவினத்தாளாயிருந்தும் **விருத்தசேதனம்** செய்ய அறிந்திருந்தாள் எப்படி? **மோசே** மகனை **விருத்தசேதனம்** பண்ணுவதைக் குறித்துப் பலமுறை பேசியிருப்பான். பேசும்போதெல்லாம் **சிப்போராள்** வீட்டில் சண்டையிட்டிருப்பாள். மோசேயும் **வீட்டின் சமாதானத்தை** எண்ணி குடும்பம் உடைந்துவிடக்கூடாதே என்று அமைதியாய் **விட்டுக்கொடுத்திருப்பான்.** ஆகவேதான் வழி பயனத்தில் எமர்ஜென்சி ஆபரேஷன் செய்ய வேண்டியதாயிற்று. அவள் கோபம் அடங்கவில்லை, விளைவென்ன? **அவளும் பிள்ளைகளும் எகிப்தின் பாதி வழியிலேயே** அவள் தன் தகப்பன் வீட்டிற்குத் திரும்ப வேண்டியதாயிற்று (யாத்18:2)

**மனைவியின் சண்டைகள்** ஓயாத ஒழுக்கு. **வீடும் ஆஸ்தியும்** பிதாக்கள் வைக்கும் சுதந்திரம். **புத்தியுள்ள மனைவியோ** கர்த்தர் அருளும் ஈவு (நீதி 19:13,14) **எதற்கெடுத்தாலும் மனைவி கணவனோடு** சண்டைபோட்டால் கணவன், இவள் என் மனைவியாக கர்த்தர் அருளினதுதானா என **யோசிக்க துவங்குகிறான்.** அதனால் **பிடிவாதக்காரியான** தன் மனைவியைக் குறித்து மோசே **தான் எழுதிய** புஸ்தகத்தில் அதிகம் எழுத விரும்பாததில் ஆச்சரியமில்லையே !

**அடைமழை** நாளில் வீட்டில் ஓயாத **ஒழுக்கும் சண்டைக்காரியான** பெண்ணும் சரி. அவளை அடக்கப்பார்க்கிறவன் காற்றை அடக்கி தன் வலது கையினால் எண்ணெயைப் பிடிக்கப் பார்க்கிறான். (நீதி 27:15,16) நாற்பது **நீண்ட ஆண்டுகட்டுப்பின்** மோசே தன் உறவினரையும் நண்பரையும் சந்திக்கச் செல்கிறான். இப்போது ஒரு தலைவனாக செல்கிறான். அதனால் அவனது மனைவி இப்போது எல்லார் முன்பாகவும் ரகளை செய்துகொண்டிருக்க முடியாது. ஆனால் அக்கவலைக்கு இடமில்லாமல் போனது. காரணம் **மோசே தன் மனைவியின் துணையின்றி** மக்களை நடத்திச் செல்லவேண்டியதாயிற்று. பல கணவர் போர் குணமுள்ள தன் மனைவியரை **மாற்றவோ, அடக்கவோ** முடியாமல் **வீட்டுமூலையில்** குருவிபோல் ஒடுங்கி வாழ முடிவெடுத்துவிடுகின்றனர். (நீதி 21:9) திருமணத்திலும் **ஏகாந்தம்**! **சிப்போராள்** காலாகாலத்தில் **தன் கணவனுக்குக் கீழ்படிந்திருப்பாளானால்** குடும்ப வாழ்க்கை எத்தனை சந்தோஷமாக அமைந்திருக்கும். **மோசே மகிமையாய்த்** ஒரு தலைவனாய் திரும்பி வருகையில் அவனது **மாமனாரும்** மனைவி **சிப்போராளும்** பிள்ளைகளும் **வனாந்திரத்தில்** அவனை சந்தித்தனர். **மோசே** அவர்களை வரவேற்று முதலில் தன் **மாமனை முத்தஞ்செய்து** அவனுக்கு **எகிப்திலும்**

வரும் வழியிலும் நடந்த எல்லாவற்றையும் விவரித்தான். ஆனால் **நெடுநாளுக்குபின் மனைவியை** சந்திக்கும்போது தன் மனைவியை சந்திக்கும் அந்த நேரம் எத்தனை ஆவலும் **சந்தோஷமும் நிறைந்து அவளுக்கு முத்தமிட்டு** நடந்த அற்புதங்கள் எல்லாவற்றையும் அவளுடன் பகிர்ந்துகொள்ளும் இயற்கையான அந்த **உணர்ச்சியும், ஆவலும், அன்பும் மோசேக்கு இல்லாமல் போனதேன்.** மோசே தன் **மாமனில்தான்** அந்த அன்பை கண்டான். (யாத். 18) **சண்டைக்காரியான** மனைவியின் கோப சுபாவத்தால் கணவனின் **ஆசாபாசத்தைக்** குழிதோண்டிப் புதைத்து விடுகிறாள்.

அதனால் அநேக ஆண்டுகள் கழித்து பார்க்கும் மனைவியிடம் எத்தனையாய் அன்பை **பொழிந்திருக்க வேண்டும்.** தன் கோப சுபாவத்ததால் **புருஷனின் அன்பையும்,** அலன் முத்தத்தின் **இன்பத்தையும்** அவள் இழந்தாள்.

எத்தனை அருமையான அருகாட்சிகளை அவள் இழந்தாள் ! எகிப்தில் நடந்த அற்புதங்கள் மோசே தன் பங்குக்கு கிடைத்த **இலவச தங்க நகைகள்,** செங்கடல் பிளப்பு, **மாரா**, **மன்னா காடை அற்புதங்கள்** கன்மலையிலிருந்து **தண்ணீர்** அமலேக்கியர் முறியடிப்பு ஆகிய சரித்திர செய்திகள் கர்த்தர் செய்த ஆவிக்குரிய செயல்கள், அதன் மூலம் கிடைத்த **ஆவிக்குரிய சந்தோஷங்கள்** யாவையும் தன் மாமனோடு மட்டுமே பகிர்ந்துகொண்டான். ஆனால் மனைவி **ஆவிக்குரியவள் அல்லாததால்** அவளிடம் எதையும் பகிர்ந்துகொள்ளவில்லை. ஒருவேளை அவள் ஒட்டுகேட்டிருக்கலாம் அவ்வளவே !

ஆனால் இப்போது மனப்புயல் மோதுகையில் மந்த மாருதமாகக் அமைதியாகக் காட்சியளிக்கிறாள். **பாலைக் கடைதல்** வெண்ணெயைப் பிறப்பிக்கும். **மூக்கைப் பிசைதல்** இரத்தத்தைப் பிறப்பிக்கும். அப்படியே **கோபத்தைக் கிண்டிவிடுதல்** சண்டையைப் பிறப்பிக்கும் என்ற பாடத்தைக் கற்றுக்கொண்டுவிட்டாள் போலும் (நீதி 30:33) அதனால்தான் ஒரு வேளை சீற்றத்தின் சமயம் சிப்போராள் அமைதியே உருவானாள் போலும்! பகை விரோதங்களை எழுப்பும், அன்போ சகல பாவங்களையும் மூடும் (நீதி 10:12)

☐ **அன்னாளைப்** போல ஒவ்வொரு பெண்ணுக்கும் **குட்டுகிற சாத்தானின** தூதர்கள் உண்டு.அது உங்கள் **சகோதரியோ, மைத்துனியோ, நாத்தனாரோ, தாயோ, மாமியாரோ, மருமகளோ** வேறு யாரோவாகவோ இருக்கலாம். **அன்னாள்** அப்படிப்பட்டவர்களோடு உண்டான பிரச்சனைகளை தன் **அமைதியினாலும் பக்தியினாலுமே வென்றாள். மெதுவான பதில்** உக்கிரத்தை மாற்றும். **கடுஞ்சொற்களோ** கோபத்தை எழுப்பும் (நீதி 15:1) **வாய்க்குக்** கடிவாளம் போடுங்கள். **சுய பெலத்தினால்** சுய ஞானத்தால் ஒருவனும் பிரச்சனைகளை மேற்கொள்வதில்லை. ஆனால் **அன்னாளைப்போல** அமைதியினாலும் பக்தியினாலுமே குடும்ப பிரச்சனைகளை **மேற்கொள்ள முடியும்** எனக் கண்டுகொள்வீர்கள் (1சாமு2:9) சண்டைபோட குறைந்தது **இருவர் வேண்டும்.** என்னோடு அவர் சண்டை போட்டார் என்றால் உங்களையே காட்டிக்கொடுக்கிறீர்கள்! **நீங்கள் அமைதியாகிவிட்டால்** யாரும் உங்களோடு சண்டைபோட முடியாது. நமது இதயத்தையும், நாவையும் கர்த்தருக்கு ஒப்புவித்தால் **அன்னாளைப்போல நமது மண வாழ்க்கை** முழு குடும்ப வாழ்வையே மாற்றிவிடும். ஆனால் **சண்டையோ** வாழ்வின் ஒவ்வொரு **திருப்பத்திலும்** தடுக்கி விழப்பண்ணும்.

என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல . என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் **என் ஊழியக்காரர் பேராடியிருப்பார்கள்.** என்றார் இயேசு (யோ. 18:36) நீங்கள் எவ்வுலகத்திற் குரியவர்கள்? **குப்பைத் தொட்டியிலிருந்து** பொருட்களைச் சேகரிப்பது போன்றது சண்டையில் கிடைக்கும் ஆதாயம் மேலெல்லாம் அழுக்காக்கிப் பெறத் தகுந்ததல்ல.

உங்களுக்குள்ளே யுத்தங்களும் **சண்டைகளும்** எதினாலே வருகிறது. உங்கள் **அவயவங்களில்** போர்செய்கிற இச்சைகளினாலல்லவா ? நீங்கள் இச்சித்தும் உங்களுக்கு கிடைக்கவில்லை, நீங்கள் **கொலை செய்தும் பொறாமையுள்ளவர்களாயிருந்தும்** அடையக் கூடாமற் போகிறீர்கள். நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே. உங்களுக்குச் சித்திக்கிறதில்லை. (யாத் 4:1,2) இச்சை பேராசையும் பேரிழப்பையும் வருவிப்பவை. **வரதட்சணைக்காகப் போராடி** மணவாழ்வை நாற்றமாக்கிக் கொண்டோர் எத்தனைப்பேர் தெயுமா? அன்னாளைப்போல தேவசித்தம் அறிந்து விண்ணப்பியுங்கள், சண்டையிட்டு சக்தியை வீணடிக்காதீர்கள்.

இளம் **அமத்சியா** நான்கு டன் வெள்ளி கூலி கொடுத்து சில இஸ்ரவேலரைத் தன் யூதேயப் படையிலே சேர்த்திருந்தான். ஒரு தேவ மனிதன் அவர்களை நீக்கிவிடும்படி பணித்தான். அதற்கு அமத்சியா தான் அவர்களுக்கு கொடுத்த கூலிப்பணம் என்னாவது என்று கேட்டான். அதற்கு தேவனுடைய மனிதன், **அதைப்பார்க்கிலும் அதிகமாய் கர்த்தர் உமக்குக் கொடுக்கக்கூடும்.** என்றான் (2 நாளா 25:9) **பணம், பதவி, பெயருக்காகப்** போராட்டமா? தேவ மனிதனது வாழ்க்கை மனதில் கொள்ளுங்கள் நாம் **இழப்பதினால் பெறுகிறோம். சண்டையிடுவதினால் இழக்கிறோம்** அடுத்தவர் வெள்ளியோடு போனாலும் போகட்டும். நாம் தேவனுக்கு கீழ்படிவோம். **தேவனை நமது பக்கத்தில் நிறுத்திக்கொள்வதே** நமக்கு ஆதாயம்.

வாய்க்குள்ளே போகிறது மனிதனைத் தீட்டுப்படுத்தாது **வாயிலிருந்து புறப்படுகிறதே மனிதனை தீட்டுப்படுத்தும்** (மத். 15:11) பிறரது கோபம் நமது பரிசுத்தத்தைக் கறைப்படுத்தாதபடி கவனமாயிருப்போம். கோபங்கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள் (எபே. 4:26) அதாவது உங்கள் கோபம் பொங்கி பிறருடனுள்ள உங்களது **உறவின்மேல் ஊற்றிவிடாதபடி** பார்த்துக்கொள்ளுங்கள் அது என் பலவீனம் என்று சொல்லி சமாளிக்காமல் **சண்டையிடும்** போதெல்லாம் **தேவனிடம் அறிக்கையிடுங்கள்** உரமுள்ள மனம் உடலைக் கட்டுப்படுத்த வல்லது.

**ஆவியின் கனியே** சண்டைக்குத் தக்க பரிகாரம். நீங்கள் அன்பாயிருந்தால் **சண்டை** போடமாட்டீர்கள். **சந்தோஷமாயிருந்தால்** கோபப்படமாட்டீர்கள். **பிரிவினை உண்டாக்க** மாட்டீர்கள். சமாதானப் பிரியராயிருந்தால் **பிரிவினை உண்டாக்கமாட்டீர்கள்.** நீடிய பொருமை உள்ளவர்களாயிருந்தால் **போராட மாட்டீர்கள்**. தயவு நிறைந்திருந்தால் **மெதுவான பதில்** அளிப்பீர்கள். **நற்குணம் இருந்தால்** எரிந்துவிழ மாட்டீர்கள். கர்த்தர்மேல் விசுவாசம் திடமாயிருந்தால் **புயபலத்தை நம்ப மாட்டீர்கள்.** சாந்தம் குடிக்கொண்டிருந்தால் **வார்த்தைக்கு வார்த்தை பதில் பேசமாட்டீர்கள்.** இச்சையடக்கம் Self Control உள்வராயிருந்தால் **உங்களையே அடக்கி ஆளுவீர்கள்.**

**சண்டையிடுவது** சேவல்தான் என்றாலும்அதை மனிதருக்கு அடைமொழியாக்கும்போதுதான் நம்மையும் **சண்டைகோழி** எனத் திரும்பி வருகிறது. நீங்கள் **ஒரு சண்டை கோழியா?**



# மாமியார் மெச்சும் மருமகள்

**மருமகளைக்** குறித்து எழுத ஆயத்தமாகிக்கொண்டிருக்கும்போது இரு பெண்களிடமிருந்து வந்த கடிதங்கள் பலநூறு மருமகள்களின் எதிரொலியாகவே வந்தன. நாம் **கூட்டுக் குடும்பத்தில்** அடைபட்டுள்ளோம். **தப்ப வழியில்லை.**

**குடும்ப பாரம்பரியங்களை** இரவோடு இரவாக மாற்றிவிட முடியாது. **கலாச்சாரத்தை** கணபொழுதில் கரைத்துவிடவும் முடியாது. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்திய **பெண்கள் பலர் கூட்டுக் குடும்பத்தில்தான் வாழவேண்டிய நிலையுள்ளது.** ஆனால் உங்களை கூட்டுக்கிளியென எண்ணத் தேவையில்லை. இருளைச் சபிப்பதை நிறுத்தி அங்கு **விளக்கை ஏற்றலாமே.** புகுந்த குடும்பத்தை **சொந்த குடும்பமாகக் கருதி** மகிழ்ச்சியும் பிரகாசமும் பரவசமுமூட்டுங்கள்.

உனக்கு எப்படிப்பட்ட **மாப்பிள்ளை** வேண்டும் என்று கேட்ட மாத்திரத்தில் ஒருத்தி கூறினால், எனக்கு **தாயற்ற கணவராக** இருக்க வேண்டும் என்றாளாம். **இவளுக்கு மனைவியாகும் தகுதியில்லை. இவள் ஒத்துப்போகத் தெரியாத** சுயநலக்காரி ஆகும். அமர்ந்த அமைதியான **சமுத்திரம்** தேர்ந்த **படகோட்டிகளை** உருவாக்காது. சுயநலமான **லட்சியக் குடும்பம்** குணசாலியானப் பெண்ணை **உருவாக்காது.**

**மருமகள்களைப்** பொறுத்தவரை **இருவிதக் கூட்டு** குடும்பங்கள் உண்டெனலாம். **புருஷன் வீட்டில்** மருமகள் புகுவது ஒன்று அங்கு **மாமியார் வீட்டை** நடத்துவார்கள். **மற்றது** பெற்றோர் **ஓய்வு பெற்றோ** வயதாகியோ **மகன் வீட்டில்** அடைக்கலம் புகுந்த நிலைமையில் இக்கலாம். இங்கே **மருமகள் வீட்டை நடத்துகிறாள்.**

## மாமியாருக்கடியில் மருமகள்

நீங்கள் **முதல் வகை வீட்டில் புகலாம்.** நீங்கள் எதிர்பார்த்த லட்சியக் கணவன், **தனிக்குடித்தனம்** தாய் போன்ற **மாமியார்.** ஆகிய எதுவும் காணப்படாத நிலையில் உங்கள் **கனவுகள்** பொசுங்கி சாம்பலாகலாம். விரும்பாத ஒன்று வாழ்க்கையில் நடக்கும்போது, ஒன்று நீங்கள் **கசப்பாகலாம்** அல்லது **இனிப்பாகலாம். கடவுள் நம்மை வைத்திருக்கும்** சூழ்நிலையை விட்டு ஓடிப்போகக்கூடாது. கடவுள் **ஆகாரைத் திரும்பிப்போய்** சாராளுக்கு **அடங்கியிருக்கச்** சொன்னபோது அவள் கர்த்தருக்கு, **நீர் என்னைக் காண்கிற தேவன்.** எனப் பெயரிட்டாள். உங்களைக் கண்ட தெய்வத்தை நீங்கள் வாழும் சூழ்நிலையில் இருக்கலாமே (ஆதி.16:13)

திருமணமான துவக்கத்திலிருந்தே மாமியார் **மாமனாரைப் பிரியப்படுத்த** முயற்சியெடுங்கள். வயதானவர்களை மாற்ற முயலுவதைவிட்டு நீங்களே அவர்கள் பழக்கவழக்கங்களுக்கு ஏற்றமாதிரி **உங்களை மாற்றிக்கொள்வது நலம்.** முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். மாமியார் மாமனார்களுக்கு **கீழ்ப்படிய வேண்டும்** என்று **வேதம் கூறாவிடினும். முதியோரைக் கனம்பண்ண** வேண்டும் என்று ஆணித்தரமாய்க் கூறுகிறது. **பணிவோடும்** அன்போடும் பேசுங்கள். **புண்படுத்தும்** வார்த்தைகளைக் **குத்தலாகவும் சிலேடையாவும்** பேசாதீர்கள். அத்தை, மாமா அம்மா – அப்பா என்று பரிவோடு கூப்பிடுங்கள். வயதான அவர்கள் வீட்டில் ஏதோ **சில காரிங்களைக் திருத்தினால்** ஒப்பாரி வைக்காதீர்கள். சோம்பலைக் களைந்து சுறுசுறுப்பாக ஓடியாடி உதவி செய்யுங்கள். **மாமியாரின்** சமையலைப் பாராட்டுங்கள். அவரை உடனே சமாதானப்படுத்துங்கள்.

பொதுவாக **மாமியாரோடுதான்** சண்டை வரும். மருணடவள் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய்தான். **மாமியார் பொல்லாதவள்** என்று எண்ணிவிட்டால், அவர் **தொட்டால்** குற்றம் **பட்டால்** குற்றம் என்றாகிவிடும். **தன் அருமை மகனை உங்களுக்கு** தியாகம் செய்தவராக அன்னாரைக் காணுங்கள். **கனி** தரும் காலத்தில் விற்கப்பட்ட மரத்தைப் போன்று கணவனின் பெற்றோர் **வாயைக்** கட்டி வயிற்றைகட்டி **அவரைபடிக்க வைத்து** இன்று **சம்பாதிக்கும்** நிலையில் **தன் மகனை** உங்களுக்கு **கொடுத்துவிட்டார்களே.** ஒரே நாளில் அவர்கள் அன்பு பஸ்பமாகிவிட்டது. **என் மகனுக்கு இதெல்லாம் பிடிக்காது.** என்று அவர்கள் கூறினால் என்ன அது! இயற்கையான பின் வெளிப்பாடுதானே. **தாயின் இதயத்துடிப்பைப்** புரிந்து கொள்ள முயற்சியெடுங்கள். உங்களுக்கு பிறந்த **மகனைக் நீங்கள் கல்யாணம் செய்து கொடுக்கும் போதுதான்** உங்களுக்கு அது முழுமையாய் புரியும்.

**மாமியார் மாமனாரின்** அருமையைப் **புதிய மருமகள்** அறிந்து கொள்வது நல்லது. நீங்கள் **வெளியே வேலை செய்பவர்களானால்** பிள்ளைகளை முன்பின் தெரியாதோரிடம் விட்டுச்செல்வதின் ஆபத்தை உணரவேண்டும். **பேரப்பிள்ளைகளிடம்** இயற்கையன்புடைய **மாமனார் மாமியார்** வீட்டில் இருந்தால் அது எத்தனைப் பெரிய ஆசீர்வாதம் ! இளம் பெற்றோர் பிள்ளைகளை அறியாமையினால் கண்மூடித்தனமாக அடிக்கும்போது **தாத்தா பாட்டியின் அவரணைப்பு** அந்த பிள்ளைகளின் ஆவி முறியாதபடி காக்கிறது. குடும்பம் சிறுகச்சிறுக **பிள்ளைக்கு வீட்டில் பேச்சுத்** துணைக்கும், விளையாடவும் வெளியே அழைத்துச் செல்லவும் **ஆள் தேவை.** சிறு பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்ட **கேள்வித்தாள் ஒன்றில்** மகிழ்வான இல்லம் என்பதென்ன என்பதற்குச் சிலரது பதில், **தாத்தா பாட்டி** இருக்கும் **இல்லமே மகிழ்வான இல்லம்.** என்பது ஆகும். **முதியோரை முதியோர் இல்லத்துக்கு மூட்டைகட்டும்** இச்சந்ததிக்குப் **பாலகர் தரும் வெளிப்பாடு இது.**

சில வேளைகளில் **உங்கள் பாதுகாப்பிற்காகவும் பிரசவம்** போன்ற **இக்கட்டான சமயங்களிலும் அவர்கள் உதவி அத்தியாவசியம்.** மாமியார் மாமனாரை மறந்துவிட்ட மருமகள் செய்வதரியாது மருளுவாள் அப்போது. மாமனார் மாமியாரை **அவசரத் தேவைகளுக்கு மாத்திரம் உதவும் வேலைக்காரர்களாக** பயன்படுத்துவதை அவர்கள் விரும்பார். அன்பும் கனம் மட்டும் செலுத்தினால் மனமார உதவி செய்வார் **திருமணமாக வேண்டிய தங்கையோ** படித்துக்கொண்டிருக்கும் **தம்பியோ உங்கள் கணவருக்கு**

**இருக்கலாம்.** சொத்தை விற்று **மூத்தவனை** படிக்க வைத்து வேலை தேடிகொடுத்த பெற்றோர் அந்த **மூத்த மகனின் உதவியை** எதிர்பார்பாரல்லவா? அது நியாயம் தானே ! **அவரை நீங்கள் மட்டுமே சொந்தம் கொண்டாடுவது நியாயமா?** நம் நாட்டிற்கே உரித்தான இச்சிக்கல்களைச் சிந்திப்பது உசிதம். பணத்தைவிட **முதியோர் எதிர்பார்ப்பது பிள்ளைகள்** பேரப்பிள்ளைகளின் சகவாசமே. **நாயும்** பூனையும் அவர்கள் ஏக்கத்தை போக்குமா?

வீட்டைத் திறம்பட நடத்த நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டியவைகள் அநேகம் உண்டு. **கூட்டுக் குடும்பம் எதிர்காலத்திற்கு பயிற்சி.** வசமாய் மாட்டிக்கொண்டோம் என்று நினைப்பவள் மூஞ்சைத் தூக்கிக்கொண்டேதான் இருப்பாள். தன் சூழ்நிலையை அப்படியே **ஏற்றுக்கொள்பவள் விட்டுக்கொடுத்து ஒத்துப்போவாள்.** தேவனது கிருபையினால் அது சாத்தியமே! பெற்றோரிடம் **மகன் அன்புகாட்டும்போது மனைவி பொறாமை கொள்ள தேவையில்லை.** பரிசுகள் கொடுக்கலாம், கணவன் வீட்டுக்கு தன் பெற்றோரிடம் வந்தவுடன் சற்று அளவலாவலாம் அவர்களைக் கவனியாது விடமுடியாதல்லவா? **அதுவேறு** அன்பு **இது வேற** அன்பு **நீங்கள் மாமனார் மாமியாரைக் கனப்படுத்தி நேசிக்கும் வரை உங்கள் கணவர் உங்களிடம் உண்மையான சந்தோஷமாயிருக்க போவதில்லை.** இருவருக்கும் இடையில் **சண்டைமூட்டி விடாதீர்கள்.** மாமியாரைப்பற்றி **அபத்தமான பொய்களைக் கணவனிடம் சொல்லும் மருமகள்களைக்குறித்தும் கேள்விப்பட்டிருக்கிறேன்.** அது மிகவும் மோசமல்லவா? என்னத்தான் நடந்தாலும் உண்மையையும் உத்தமத்தையும் காத்தால்தான் **கர்த்தர் உங்கள் பட்சம்** இருப்பார். மெய்மறந்து **பொய் போசாதீர்கள்.**

**பதிலுக்குப் பதில்** வார்த்தைகளை வீசாதீர்கள். **அமைதியைக்** கையாளுங்கள். **அமைதியாயிருந்ததற்காய்த்** துக்கித்தவர் அநேகரில்லை. உங்கள் அமைதி கணவனையும் மாமனார் மாரியாரையும் **இளகச்செய்யும். கணவன் வீட்டில்** நடக்கும் எல்லா சச்சரவுகளையும் உங்கள் **பெற்றோர்** வீட்டிற்குப் **பக்கம் பக்கமாய்** எழுதாதீர்கள். கோபித்துக்கொண்டு எதற்கெடுத்தாலும் **அம்மா** வீட்டில் **அடைக்கலம் புகுவது** ஞானமல்ல. வாழ்க்கையை தைரியமாய்ச் சந்திக்க வேண்டும். **மாமியார் மாமனாரைக்** குறித்து அக்கம்பக்கத்தில் புரளி பேசாதீர்கள். அவர்களைப்பற்றி உங்கள் கணவன், பிள்ளைகள் உள்ளத்தில் நஞ்சேற்றாதீர்கள் சொத்துத் **தகராறில் கணவனை விட்டுக் கொடுக்கச்** சொல்வதற்கேயன்றி மற்றபடி வாய் திறவாதீர்கள். **தூங்கி வழிந்து வேதத்தை வாசிக்காமல்** தோண்டித் துருவி வாசித்தால் **அன்றாடத் தெம்பும்** வழிநடத்தலும் தவறாமல் கிட்டும்.

**மருமகளை மகளைப்போல** பராமரிக்கும் மாமியார்களும் உண்டு. சில மாமியார்கள் பிரசவத்திற்குத் மருமகளின் **தாய் வீட்டிற்குத்** துரத்தாமல் **தாங்களே பார்த்தும் உதவுவர்!** பணமல்ல, பெண்ணே அவர்களுக்கு முக்கியம் பிறசவித்த **இரண்டாவது** பிள்ளையும் **பெண்ணாகிவிட்டதே எனப்பயந்து நடுங்கும் மருமகளை நல்ல மாமியர்கள் தடவிக்கொடுத்து தைரியமூட்டுவர்.** அப்படி வீட்டில் உதவுவர், **பணமும்** கொடுப்பார், **பேரப்பிள்ளைகளைப்** பராமரிப்பர். **மருமகள் வேலைக்குச்** சென்றால் மாமியார் **வேலைக்காரிப்போல்** சமைத்து துடைத்து யாவையும் செய்வர். மகனை இழக்கக்கொடுத்த சிலர் தன் **மருமகளையே மறுமனம்** செய்ய ஊக்குவித்து அவளுக்கு **ஏற்றத் துணையைப்** பார்த்தும் கொடுத்துள்ளனர். அப்படிப்பட்ட மாமியார் – மாமனார் இன்றும் உண்டு.

ஒருவேளை உங்கள் **மாமியார்** ஈனமாக நடந்துகொண்டால். **தைரியமாக** அதே சமயம் **ஞானமாக வரம்பில்** அவர்களை **நிறுத்துங்கள்.** இதற்குக் **கோபாவேசமடையவோ கெட்ட வார்த்தைகளை** கொட்டவோ **அவசியமில்லை,** அன்போடும் கனிவோடும் **தன்னுரிமையைக் காத்துக்கொள்ளுங்கள்.** அதுவும் முடியவில்லையா ? **மறு கன்னத்தை காட்டுங்கள்.** இது கடினமான உபதேசம்தன், ஆனால் கர்த்தர் இதைத்தானே நமக்ன் உபதேசமாக கூறினார்.

## மருமகளுக்கடியில் மாமியார்

**எந்த நாணயத்திற்கும் இருபக்கங்கள் உண்டு. மாமியாரைக் கொடுமைப்படுத்தும் மருமகளுக்கு** கணக்கில்லை. **சில மருமகள்கள் வீட்டை நடத்தினால்** மாமியாரை **பிச்சைக்காரிபோல்தான்** நடத்துவார்கள். கிறிஸ்தவ நற்பண்புகளை இங்கேதான் காப்பது அவசியம்.

குருவிப்புத்தியுள்ள பெண்கள் திருமணமான புதிதில் மாமியார் தங்களை நடத்தப்பட்ட விதத்திற்காய் அதை மனதில் வைத்துக்கொண்டு **வயதான மாமியாரைப்பழி** வாங்குவார்கள். குணசாலியான பெண்ணோ **பழைமையான வைகளை மன்னித்து** கிறிஸ்துவின் அன்பைப் பிரதிபலிப்பாள். மாமியார் அல்லது மாமனார். **திக்கற்றவர்** என்பதினால் அவர்களைத் தூக்கியெறிந்து பேசாதீர்கள். தேவன் **திக்கற்றவர்களின் தேவன்.** நல்ல உணவளியுங்கள். **மருமகள் ஒருத்தி** மாமியாருக்கு **நாய் தட்டு** போன்றதோர் தட்டில் **சோறு போடுவாளாம்.** மாமியார் மரித்தபோது **பேத்தி அந்த தட்டை துடைத்து கழுவி** வைத்துக்கொண்டாளாம். தாய் ஆச்சரித்தோடு வினவியதற்கு மகள் பதிலளித்தாளாம். **உங்களுக்கு வயதானதும்** சோறு போட **தட்டு வேண்டுமல்லவா அம்மா,** என்று கூறினாளாம். நீங்கள் மாமியாரானதும் எப்படி நடத்தப்பட விரும்புகிறீர்களோ அப்படியே **உங்கள் மாமியாரை நடத்துங்கள்.**

தனித்தனியாய் இயங்காதீர்கள். **மாமனார் மாமியார் தெண்டம்** என்பதுபோல் நடத்தாதீர்கள். வீட்டில் உதவி செய்யவிடுங்கள். **நன்றி சொல்லுங்கள்** மிரட்டாதீர்கள். அவர்களை **தங்களுக்கு விருப்பமான ஆகாரத்தை சமைத்துக்கொள்ள தருணம் அளியுங்கள்.** அவர்கள் **வெளியே போக விரும்பினால்** தடை செய்யாதீர்கள், அவர்கள் வெளியே போய் வந்தால் **சுகதேசிகளா**யிருப்பார்கள். அவர்கள் **தங்கள் நண்பரைத்** தேநீருக்கோ, விருந்திற்கோ **அழைத்து வரட்டும், வேலைக்காரிபோல் விரட்டக்கூடாது**, அவர்கள் தங்களால் முடிந்ததை செய்யட்டும். அவர்கள் வீட்டைவிட்டு வெளியேறும்படியான சூழ்நிலையை உருவாக்காதீர்கள். **கிழம், தரித்திரம், பீடை தொலைந்துபோக மாட்டேன் என்கிறதே** என வெளிப்படையாக சபிப்பவர்களும் உண்டு. சில குடும்பங்களில் **மருமகன்** வசைமாறிப்பொழியும்போது **ஊமையைப்போல்** கொடுமையை சகித்து **முடங்கிக் கொள்ளும்** மாமியார் எண்ணிக்கையை யார் அறிவார்? வேறு வழி,

சிறுமி ஒருத்தி பின்னாலிருந்து பாட்டியம்மாளின் கண்களை மூடினாளாம். பூரித்துப்போன பாட்டி ஏனென்று கேட்டதற்கு கள்ளம் கபடம் அறியாத பேத்தி, பாட்டி **நீ கண்ண மூடினா** நெறய **பணம் வரும்னு** அம்மா சொன்னாங்க? என்றாளாம். **கொடுமை!** இதுவும் ஒருவித **கொலையல்லவா** (1 யோ. 3:15, மத் 5:21,22) **சொத்திற்காகவே அல்லது பென்ஷனுக்காகவே** அத்தே **அத்தே** என்று சுத்தி சுத்தி வரும் **மருமகள்கள்** பலர். உங்கள் அன்பு அடிநோக்கமுள்ளதாக இருக்க வேண்டும். **மாமனார் மாமியாரின்** கடைசி சொட்டு

இரத்தத்தையும் **கடைசி பைசாவையும்** உறிஞ்சி விட்டுவிடும், **டிராகுலாக்களைக்போன்ற** மருமகளை குறித்து என்ன சொல்வது !

தனிக் குடித்தனமானால் அன்பான **உயிரோட்டமான கடிதங்கள்** அடிக்கடி எழுதுங்கள். **அழுக்குப்பேப்பரில் கிறுக்கிப் கடிதம் எழுதாதீர்கள்.** உங்கள் **பெற்றோருக்கு** எழுவதுபோல எழுதுங்கள். அன்னாரது பிறந்த நாட்களையும் **திருமண நாளையும்** நினைவுகூர்ந்து **வாழ்த்துதல்** அனுப்புங்கள். கூடுமான பொழுதெல்லாம் சந்தியுங்கள். அவர்கள் விரும்பும் **வெகுமதிகளைக் கொடுத்து** அகமகிழச்செய்யுங்கள். **மாமியார் மாமனார் வியாதி படுக்கையில்** உங்கள் உதவி தேவைப்படும்போது அவர்களிடம் **வந்து தங்கி** உதவ தயங்காதீர்கள். அருகில் குடியிருப்பீர்களேயானால் **உணவோ** மற்றவையோ **கொடுத்தனுப்புங்கள்.** சில பெற்றோர் வயதானாலும் பெலவீனமானாலும் **மகனோடு தங்க தயங்குவர்.** மருமகள் **மாமியாருக்கு உறுதி கூறி** கூட வந்திருக்க அழைக்க கட்டாயப்படுத்த வேண்டும். உங்களையே மையமாகக்கொண்டு சுழலும் உலகையே நீங்கள் விரும்புவது சுயநலம். உண்மைப் பரவசம் சில அசௌகரியங்களையும் பொருட்படுத்தாது பிறரை மகழ்விப்பதே கர்த்தருக்கு பிரியம்.

- ☐ **வயதான பெற்றோரையோ மாமனார் மாமியாரையோ பராமரிப்பவர்களின் விசிறி நான்.** உங்களுக்குத் தெரியாது. என்கிறீர்களா? நானும் **பன்னிரெண்டு** ஆண்டுகள் என் **மாமியாரோடு** வாழ்ந்தவள். எங்களுக்கும் **சிக்கல்கள் இல்லாமலில்லை.** இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கவும் **பொறுத்துப்போகவும்** வேண்டியிருந்தது. ஆனால் நாங்கள் இருவரும் விடாமுயற்சியோடு **உறவு காக்கப்பாடுபட்டதால்** அவர்கள் எங்களுக்கும் **நாங்கள்** அவர்களுக்கும் **ஆசீர்வாதமாக இருக்க முடிந்தது.** ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவனது உள்ளத்தை அறிய **மருமகள் ஆன்மீகத் தெளிவுடனிருக்க வேண்டும்.** தான் மாமனார் மாமியாருக்குச் செய்வது தவறா சரியா என்பதை ஆறாம் அறிவு அவளுக்கு உணர்ந்தும்.

**ஈசாக்கு** ரெபெக்காளின் **மருமகள்களான** யூதீத்தும் பஸ்மாத்தும் அவர்களுக்கு **மனநோவாயிருந்தார்கள்** (ஆதி 26:34,45) **ரெபொக்காளுக்கு** உயிரோடியிருப்பதே **வெறுப்பாயிற்று** (27:46)

**ரூத்தோ** தன் மாமியாரை விடாமல் பற்றிக்கொண்டாள் (1:14) **தேவனையன்றி** வேறு எதற்காக அவர் மாமியார் என்ற அந்த **அநாதையைப்** பற்றிக்கொள்ள வேண்டும். **போவாஸ்** ரூத்திடம் கூறினான். **நீ உன் மாமியாருக்குச் செய்தது எல்லாம் எனக்கு விவரமாய் தெரிவிக்கப்பட்டது. உன் செய்கைத்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளை யிடுவாராக. அவராலே நிறைவான பலன் உனக்கு கிடைப்பதாக** என ஆசீர்வதித்தான் ( 2:11,12) அது அப்படியே ஆனது.,

**மாமியார்-மருமகளின்** உறவைக்குறித்து தேவன் இத்தனைக் **கரிசனயுள்ளவராய் இருப்பதால்தான்** அதற்காகவே **ஒரு புத்தகம் முழுவதையும்** தனது வேத புத்தகத்தில் ஒதுக்கியிருப்பார். இருவரும் தமது வாழ்வற்கான தேவத் திட்டத்தோடு ஒத்துழைப்பாரானால் அது எத்தனை சௌந்தரியமாகும் என ஆவியானவர் காட்டியுள்ளார். **ரூத்தின் புத்தகத்தை** வாசியுங்கள் திரும்ப வாசியங்கள். நீங்கள் ஓர் **ரூத்தாக** மாறும் வரை திரும்ப திரும்ப வாசியுங்கள். தேவன் நிறைவான பலனருள்வார். **உங்களை மருமகளாக** அல்ல **திருமகளாக** மற்றுவார். இது உறுதி.



# நானும்
# மரித்த Dr. Rev. சாம் கமலேசன்
# அவர்களும்....

## என் இரட்சிக்கப்பட்ட அனுபவம்

இந்தியாவில் தமிழ்நாட்டில் **சேலம் ஜங்ஷன்** ரயில்வே ஸ்டேஷன் அருகே என் வீடு அமைந்திருக்கிறது. 1964 மே மாதம் FMPB **மாநில முகாம்** நடந்து முடிந்தது. சில நாட்கள் கழித்து ஒரு ஞாயிறு மாலை சேலம் ஜங்ஷன் ரயில்வே ஸ்டேஷனில் உள்ள ஒரு சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து தினசரி பத்திரிக்கைகளை வாசித்துககொண்டிருந்தேன், படித்து முடித்துவிட்டு ஸ்டேஷனலில் உள்ள Book Stallல் திரும்ப கொடுத்துவிட்டு மறுபடியும் அதே சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தபோது ஏதோ என் மனதில் ஒரு உருத்தல், சமாதானம் இல்லாத நிலை. அது நாள் வரை அப்படி ஒரு குழப்பம் என் மனதில் உண்டானதில்லை. ஒருவேளை **டேனிஷ்பேட்டை** பெத்தேலில் நடந்த **மாநில முகாமில்** கேட்ட **பிரசங்கம்** எண்ணில் அந்த சமாதான குறைவை உண்டாக்கியதோ !

பெரும்பலானவர்கள் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். எங்காவது **தனியாக சென்று பாவங்களை அறிக்கையிட்டு** ஜெபித்தால், சமாதானம் , சந்தோஷம் கிடைக்கும் என்பார்கள். நானும் **தனியாகச் சென்று** ஜெபித்தால் என்ன? உடனே எழுந்து அந்த ஸ்டேஷன் பிளாட்பாரத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த **சேலம் ஜங்ஷன்** ரயல்வே கேட் அருகே **ஆள் நடமாட்டம்** இல்லாத **ஒரு ஏரி** உண்டு. தனி ஜெபத்துக்காக அந்த இடத்தை நோக்கி **ரயில் தண்டவாளம் ஓரமாக** நடந்து சென்று ஏரிக்குள் இறங்கினேன். தண்ணீர் இல்லாத ஏரி, முள் மரங்கள் நிறைந்த ஏரி. ஏரி உள்ளே சென்று ஒரு **புதருக்குபின்** முழங்கால் இட்டு எனக்கு தெரிந்த **மூன்று பாவங்களை** அறிக்கை செய்து ஜெபிப்போம் என்று மனத்துக்குள் தீர்மாணித்து **முதல் பாவத்தை** அறிக்கை செய்து என்னை மன்னித்துவிடும் ஆண்டவரே, இனி அந்த பாவத்தை செய்யமாட்டேன் என்றேன்.

அதன்பின் **இரண்டாம் பாவம்** அறிக்கை செய்ய துடங்கும் முன் திடீரென்று என் முன் **சினிமா திரைபோல்** காண்கிறேன். அதில் நான் செய்த அத்தனை பாவங்களையும் **எப்போதோ நான்** செய்த அத்தனை பாவங்கள் யாவும் **ஒன்றன்பின் ஒன்றாய்** என் முன் அந்த திரையில் காட்டப்பட்டது. கட்டப்பட்ட பாவங்கள் எதுவும் எனக்கு ஞாபாகத்தில் இல்லை. ஆனால் **அந்த இடம் அந்த சூழ்நிலை** யாவும் உண்மை. காட்டப்படும் உருவம் என்னுடையதுதான். பழைய காலத்து கருப்பு வெள்ளை சினமா காண்பதுபோல் அப்படியே காட்டப்பட்டது. யாரும் அறியாத சமயத்தில் **நான்செய்த பாவம்** என் நண்பர்கள்கூட பார்க்காத சமயத்தில் நான் தனிமையில் செய்த **ஒவ்வொரு பாவமும்** காட்டப்பட்டது.

எனக்குள் **பயம் உண்டானது**. காரணம், நான் செய்த பாவங்கள் **யாருமே பார்த்திருக்க முடியாதே!,** பின் எப்படி எனக்கு எல்லாம் காட்டப்படுகிறது. அப்போதுதான் ஒரு காரியம் விளங்கிக்கொண்டேன். **கர்த்தர் சகலத்தை அறிவார்**. அவர் **சகலத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார்.** சகலத்தையும் **அவர் பதிவு செய்து வைத்திருக்கிறார்.** அவருக்கு **மறைவானது எதுவும் இல்லை.** சங்கீதக்காரன் கூறுவதுபோல். சங், 139:1-8 அன்று என் வாழ்க்கையில் அந்த ஏரியில் வைத்து அவைகளை உணர்ந்தேன்.

இப்போது பயம் எனக்கு **அழுகையாக** மாறியது. கர்த்தாவே நான் **மூன்று பாவங்கள்தானே அறிக்கைசெய்ய வந்தேன்.** ஆனால் இப்போது என் கண்முன் ஏராளமான பாவங்களை காண்பித்துக்கொண்டிருக்கிறார். **எத்தனை பாவத்தை** நான்அறிக்கை செய்வேன். இதோ பாவங்களை தொடர்ந்து எனக்கு காண்பித்துக் கொண்டேயிருக்கிறீர், நீர் **எத்தனை பாவத்தை** மன்னிப்பீர் என்று அழுதேன். அப்போது யோ.1:8 **இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் சுத்தகரிக்கிறது** என்ற வசனம் என் உள்ளத்தில் வந்தது.

வேத புஸ்தகத்தை ஒழுங்காக வசிக்காத எனக்கு அந்த குறிப்பிட்ட வசனம் மட்டும் என் மனதில் எப்படி தோன்றியதோ? அந்த வசனத்தில **சகல** என்ற வார்த்தை என்னை சிலிர்க்க வைத்தது. **சொன்ன** பாவம், **சொல்லாத மறந்த பாவம்** அனைத்தையும் **இயேசுவின் இரத்தம் மன்னிக்க வல்லது** என்பது உறுதியானவுடன் என் **அழுகை சந்தோஷமாக** மாறியது. உடனே கர்த்தரை துதிக்க ஆரம்பித்தேன். **பாவம்** மன்னிக்கப்பட்ட உறுதி என்னை **சந்தோஷப்பட வைத்தது.** கர்த்தரை மனதார துதித்தேன.

☐ இரட்சிக்கப்படும்முன் நான் **வீட்டுக்கு அடங்காதவனாக அரசியலிலும், சினிமா** துறையிலும் அலைந்துகொண்டிருந்ததால் **என் தகப்பன்** என்னை வெறுத்தார். என் தாய் தூனில் கயிறு கொண்டு என்னை **கட்டிவைத்து** அடித்தார். **ஒரு நாள்** முழுவதும் எனக்கு **சாப்பாடு போடவில்லை.** இத்தனைக்கும் நான் வீட்டிற்கு ஒரே ஒரு ஆண் பிள்ளை. ஆறு மூத்த சகோதரிகளுக்குபின் **கடைசியாக பிறந்தவன்.** ஆனால் வீட்டுக்கு **அடங்காதவன் கீழ்படியாதவன்** என்ற காரணத்தால் என்னை மிகவும் **கட்டுபடுத்தவும், கண்டிக்கவும்** என் பெற்றோர் முயன்றனர். நான் **சுதந்திரமாக** வாழ ஆசைப்பட்டு **வீட்டைவிட்டு வெளியேறி இந்திய ராணுவத்தில்** சேர்ந்தேன். **கர்த்தரை தேடாத** காலம். **என் பெற்றோரை** அழ வைத்தவன். இப்படிப்பட்ட எனக்கு **கர்த்தர் காட்டிய மகா பெரிய கிருபை,** இராணுவத்தில் **மருத்துவ** துறையில் **பூனாவி**ல் படிக்க ஒரு சந்தர்ப்பம் கொடுத்தார். என்னை முன் குறித்த என் கர்த்தர், **கர்த்தரை நான் துக்கப்படுத்தியதற்கு** அவர் என்மேல் கோபப்படாமல் என்னை **உயர்த்த சிறப்பான வழியை திறந்து** கொடுத்தார். அது **இந்திய-சீனா** (மாசேதுங்) காலத்தில் நடந்த **யுத்த காலமாக** இருந்தது. அந்த சூழ்நிலையில் Emergency Recruitment **அவசரகால மருத்துவ படிப்பாக** ராணுவத்தினர் கொடுத்த விசேஷ அழைப்பில் **என் பெயர்** சேர்க்கப்பட்டதால் எனக்கு அந்த மருத்துவ படிப்பும் கிடைத்தது. 1964ம் வருடம் பெப்ரிவரி மாதம் **கோர்ஸ்** முடிந்து ராணுவத்திலிருந்து **விருப்ப ஓய்வு** பெற்று **டாக்டராக** வெளியே வந்தேன். Village Rurel Clinicல் விடுமுறைக்கு போன **டாக்டருக்கு** பதிலாக 3 மாதங்கள் அங்கு வேலை செய்தேன். அதன்பின்புதான் **டேனிஷ்பேட்டை பெத்தேல் ஐக்கியத்திற்கு** அழைப்பை பெற்று டாக்டராகி **1976**ம் வருடம் வரை பெத்தேலிலும் சுற்றியுள்ள சிராமங்களிலும் வைத்திய தொழில் செய்தேன்.

**எனக்கு** வயது 81 சமீபத்தில் **91 வயதில்** மரித்த Dr. Rev. சாம் கமலேசன் அவர்களுக்கும் எனக்கும் அதிக நெருக்கம் கிடையாது.

என் **மருமகன்** Dr. **பிரபுசிங்** (Principal, SAIACS, Bangalore) அவர்களுக்கும் **என் மகள்** Mrs. **ஷீபா பிரபுசிங்** அவர்களுக்கும் நல்ல நெருக்கம் உண்டு. அமெரிக்காவில் **ஆஸ்பரி செமனாருக்கு** வரும்போதெல்லாம் என் மகள் வீட்டில்தான் உரிமையோடு வந்து **தமிழ்நாட்டு சாப்பாடு** சாப்பிடவேண்டம் என்று கேட்டு வருவர்.

1964ம் வருடம் நான் **டேனிஷ்பேட்டை** (சேலம் அருகே) **பெத்தேல் ஐக்கிய**ம் டாக்டராக இணைக்கப்பட்டேன். அதே வருடம்தான் நானும் மனம் திரும்பின **இரட்சிக்கப்பட்ட** அனுபவத்துக்குள் வந்தேன். அந்த அனுபவத்தைத்தான் நீங்கள் மேலே வாசித்தது ஆகும்.

### Dr. Rev. **சாம் கமலேசனுடன் என் முதல் சந்திப்பு**

**பெத்தேல்** மாநில முகாம் முடிந்து சுமார் 3 மாதங்கள் கழித்து பெத்தேலில் ஒரு பெரிய ஆவிக்குரிய கூட்டம் நடந்தது. அதுக்கு சம்பந்தப்பட்டதல்ல என்று என்னுகிறேன் **மேடையில்** பங்காரபேட்டை SIBC கல்லூரியின் டீன் Rev. RICE அவர்களோடு சில வெள்ளைக்கார பிரசங்கிகளுடன் Dr. Rev. **சாம் கமலேசன்** அவர்களும் அமர்ந்திருந்தார்.

நான் கூட்டத்தின் **பின் பகுதியில்** கூட்டங்களின் மத்தியில் **தரையில்** அமர்ந்திருந்தேன். **Bro. P. SAM** அவர்கள் மேடையின் கீழே முன் பகுதியில் என்னைப்போல் **தரையில்** அமர்ந்திருந்தார். கூட்டத்தில் சில நிகழ்ச்சிகள் நடந்துமுடிந்தவுடன் **Dr. Rev. சாம் கமலேசன்** அவர்கள் மைக்கில் இப்போது நம் மத்தியில் **பிறந்து சில மாதங்களே** ஆன **ஒரு குழந்தை** உண்டு, அவர் பெயர் **Dr. புஷ்பராஜ்,** தயவுசெய்து மேடைக்கு வரும்படி அழைக்கிறேன் என்றார். அதோடு அவர் **தனது சாட்சியை** நம்மோடு பகிர்ந்து கொள்வார் என்றார். எனக்கு மின்சாரம் பாய்ந்ததுபோல் இருந்தது. என் வாழ்க்கையில் நான் இரட்சிக்கப்பட்டது. Dr. Rev. சாம் கமலேசன் அவர்களுக்கு தெரியாது. நான் அவரிடம் அதைக்குறித்து பேசவும் இல்லை. ஆனால் அவர் எப்படியோ யார் மூலமாகவோ என் சாட்சியை அறிந்து வைத்திருந்தார். ஆகவேதான் தெளிவாக என் பெயர் சொல்லி அழைத்தார். எனக்கு மிகவும் கூச்சமாக இருந்தது. அவ்வளவு பெரிய ஊழியர்கள் நிறைந்த கூட்டத்தில் மேடைக்கு போக தயங்கினேன். உடனே **முன்பக்கம் தரையில்** உட்கார்ந்திருந்த **Bro. P. சாம்** அவர்கள் எழுந்து நின்று என்னை தேடினார். உடனே நான் எழுந்து கூட்டங்களை விலக்கி **மேடைக்கு** சென்றேன். **மைக்குக்கு** முன் நின்றேன். **மேடையில்** உடகார்ந்திருந்த வெள்ளைக்கார பிரசங்கிமார்கள் என்னை உற்சாகப்படுத்தும் வகையில் கைகளை தட்டினார்கள். **என் வாழ்க்கையில் நான் மேடை ஏறி பேசி பழக்கம் இல்லை. சாட்சியை** எப்படி கூறுவது **எங்கு ஆரம்பிப்பது** எங்கு **முடிப்பது** என்றுகூட தெரியாது.

மைக்கை பிடித்து என் முன் அமர்ந்திருக்கும் கூட்டத்தை ஒருமுறை பார்த்தேன் அவ்வளவுதான். உடனே **கண்களைக் மூடிக்கொண்டு** என் வாழ்க்கையின் ஆரம்பம்முதல் ஏரியில் பாவ அறிக்கை செய்ததுவரை கடகடவென்று கூறி முடித்தேன். **பெரிய கைதட்டல்** அல்லேலூயா ஸ்தோத்திரம் என்று சிலர்கூற **மேடையில் உள்ளவர்களுக்கு** நான் கை கொடுத்து மேடையிலிருந்து இறங்கி நான் உட்கார்ந்திருந்த இடத்திற்கு திரும்ப போகவில்லை. அப்படியே என் அறைக்கு சென்று **முழங்கால்படியிட்டு கர்த்தரை துதித்தேன். முதல்** மேடை அனுபவம், **முதல் முறை சாட்சி கூறியது** நன்றி வெள்ளமாய் ஜெபத்தில் பெருக்கெடுத்தது. அந்த மேடையில 1964ம்

வருடம் என் **கண்களை மூடி** சாட்சிகூறிய நான் கடந்த 57 வருடங்களாக **கண்களை மூடியபடிதான்** பிரசங்கம் செய்வேன். அன்று மேடையில் முதன்முதலில் சாட்சி கூறியபோது **கண்களை மூடிய** நான் இதுவரை பிரசங்கம் செய்யும்போது **கண்களை திறப்பதில்லை.** அந்த காலத்தில் சகோ. **P. சாம்** அவர்கள் VBSக்கு என்னை மட்டும் தன் கூட **அழைத்து போகும்போது** VBS நடக்கும் இடத்தில் ஞாயிறு காலை ஆராதனையில் அவரை பேச சொல்வார்கள். அப்போது சகோ. **P. சாம்** அவர்கள் **தான் பேசுவதற்கு முன்** என்னை பேசும்படி அவரே மேடையில் மைக்கில் என்னை அழைத்துவிட்டு அமர்ந்து கொள்வார். அதன்பின் அவர் பிரசங்கம் செய்து முடிப்பார். அப்போதே **பிரசங்க குறிப்புகளை** பேப்பரில் **எழுதி வைக்காமல்** எப்படி பிரசங்கிப்பது என்பதை எங்கள் **வழி பிரயாணத்தில்** சகோதரன் **P. சாம்** அவர்கள் எனக்கு சொல்லி கொடுத்தார், அன்றைய நாட்களில் **பெத்தேலில் கார் வசதி** கிடையாது. டேனிஷ்பேட்டையிலிருந்து **தீவட்டிப்பட்டி** வரை சைக்கிலில் சென்று சைக்கிளை அங்கு ஒரு வீட்டில் நிறுத்திவிட்டு, பஸ் ஏறி சேலம் வந்து அங்கிருந்த தமிழ்நாட்டு அரசாங்க பஸ்ஸான **திருவள்ளுவர்** எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் ஏறி போக வேண்டிய ஊருக்கு பயனிப்போம். இப்படி பலமுறை பல இடங்களில் என்னை பிரசங்கிக்க அவர் பழக்கிவிட்டார். மக்களும் என் **பிரசங்கத்தையும்** என் **பாடலையும்** விரும்பி கேட்பார்கள்.

## Dr. Rev. **சாம் கமலேசனுடன் பழகிய இரண்டாம் அனுபவம்**

மேலே கூறிய எங்கள் முதல் அனுபவத்தின்பின் **பெத்தேல் உருவாக்க** அவர் செய்த பல முயற்சிக்கு **சகோ. P. சாம்** அவர்கள் பக்கபலமாக இருந்ததோடு நல்ல ஆலோசனைக் காரராகவும் இருந்தார் என்பதையும் நான் கண்டேன்.

## கிணறு தூர் வாரிய தாழ்மை

**பெத்தேலில்** உள்ள **விளைநிலத்திலிருந்து** வரும் அரிசி போன்ற உணவு வகைகள் **அனாதை பிள்ளைகளை** போஷிக்க மிகவும் உதவியாக இருந்தது. ஆனால் அந்த காலத்திலேயே பெத்தேலில் **தண்ணீர் பஞ்சம்** இருந்தது. பெத்தேலில் போதுமான தண்ணீர் இல்லாத நிலை அந்த காலத்திலிருந்தே தொடர்ந்தது. அதனால் FMPB மாநில முகாமுக்கு வரும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு **குடிக்கவும் குளிக்கவும்** தண்ணீர் லாரியின் மூலம் கொண்டுவர **ஆயிரக்கணக்கில் பணம்** செலவழித்து தண்ணீர் விலைக்கு வாங்கும் நிலை ஏற்பட்டது. பெத்தேலில் பெரிய கிணறு உண்டு. அதை தூர் வார கிணற்றுக்குள் கூலி ஆட்களை வைத்து அவர்களோடு Dr. Rev. **சாம் கமலேசன்,** சகோ. **P. சாம்** அகியவர்கள் தலையில் **தலைப்பாகை கட்டி** கிணற்றிலிருந்து அழுகிய கருத்த **சேற்று மண்களை** தலையில் சுமந்து **கிணற்றுக்கு மேலே** ஏணிவைத்து கொடுக்க சகோ. **P. சாம்** அவர்களும் மற்றவர்களும் அதை வாங்கி மலைப்போல் குவிப்பார்கள். அவர்களோடு Dr. **பூஷன்ராஜ்,** சகோ. **ஸ்டீபன்.** சகோ. **பால் கோபால்,** சகோ. **நியுபோயட்** அவர்களும் தங்கள் **பதவி,** தங்கள் **உயர்ந்த படிப்பு** இவைகளைப்பற்றி யோசிக்காமல் **கௌரவும் பார்க்காமல் கூலிகாரர்களைப்போல் தூர் வாரி போட்டது** ஒரு அற்புதமான **தாழ்மையின் சாட்சி** அது. மாலை பெத்தேல் கிளினிக் முடித்து சேலத்துக்கு திரும்ப ரயில்வே ஸ்டேசன் போகும் வழியில் அவர்கள் தூர் வாருவதை சுமார் 1/2 மணிநேரம் நின்று இப்படிப்பட்ட **தாழ்மையுள்ள** பொறுப்புள்ள அந்த **பெத்தேல் ஸ்தாபர்களுக்காக** தேவனை துதித்தேன்.

**அன்றைய நாட்களில்** பெத்தேல் ஊழியர்கள் அனைவரும் **ஒரு தாய்** வயிற்று **பிள்ளைகளைப்போல்** ஒன்றாக இணைந்து செயல்பட்டதால் பெத்தேல் அத்தனை பெரிய வளர்ச்சியை பெற்றது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

## Dr.Rev. சாம் கமலேசனுடன் எனக்கு உண்டான மூனறாம் அனுபவம்

1967ம் வருடம் ஜுலை மாதம் 9ம் தேதி பெரிய மலை **முதல் மிஷனரியாக** ஊழியம் செய்ய 8ம் தேதி இரவே **மாரண்ட ஹள்ளி** என்ற கிராமத்துக்கு பஸ்ஸில் பயணம் செய்து இரவு சுமார் 8 மணி க்கு வந்து சேர்ந்தோம். அந்த ஊரில் ஒரே ஒரு கிறிஸ்தவக் குடும்பமான எலிமென்டரி ஸ்கூல் தலைமை ஆசிரியர் திரு. **ரத்தினம் ஐயா** வீட்டில் நாங்கள் யாவரும் தங்கினோம். அவர் குடும்பம் பெரிய குடும்பம் 7 பெண் பிள்ளைகள் ஒரே ஒரு மகன் . எங்கள் எல்லாருக்கும் அவர்கள் உணவளித்து உபசரித்தார்கள்.

மிஷனரி ஊழியம் தொடங்கியபின் எந்த மிஷனரிகள் வந்தாலும் அவர் வீட்டில் இரவு தங்கி **விடியற்காலை மலை ஏறி** பெரிய மலையில் **பெட்ட முகுளாளம்** வந்து சேருவார்கள். அந்த குடும்பத்தை மறக்க முடியாது.

அன்று இரவு எல்லாரும் வீட்டின் மைய பகுதியில் கூடி பாட்டுப்பாடி (அரிக்கன் விளக்கு) எண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் வசனம் வாசித்து ஜெபிக்க துடங்கியபோது அந்த வீட்டினர் Dr. Rev. சாம் கமலேசன் அவர்களின் கம்பீரகுரலில் பாடுவதை கேட்க ஆசைப்படுகிறோம் என்று சகோ. **எமில் ஜெபசிங்கிடம்** கூற அவர் சாம் கமலேசனிடம் பேச பயப்பட்டு, **சகோ. P. சாம்** அவர்களிடம் கூறினார்கள். உடனே சகோ. P. சாம் அவர்கள் Dr.Rev. கமலேசனிடம் **இந்த வீட்டுக்காரார்கள்** உங்களை ஒரு பாட்டுபாடும்படி கேட்கிறார்கள். இவர்களை திருப்திப்படுத்துவது நம் ஊழியத்துக்கு நல்லது என்றார்கள். உடனே **சாம் கமலேசன்** அவர்களுக்கு **கோபம் வந்துவிட்டது.** என்ன சாம் இது. நாம் என்ன **பாட்டு பாடி ரசிப்பதற்காகவா** இப்போது இங்கு கூடியிருக்கிறோம் என்று கோபத்தோடு கூறிவிட்டு தாமதமில்லாமல் உடனே **எல்லாம் ஏசுவே எனக்கெல்லாம் ஏசுவே** என்று தனக்கே உரிய குரலில் ஒரு அடி பாடி முடிக்க மீதி எல்லா சரணங்களையும் நாங்கள் எல்லாரும் அவரோடு இணைந்து பாடி முடித்தோம். **பயண களைப்பு** அவரை கோபப்பட வைத்தது. அப்போதுதான் அவர் **கோபப்பட்டதையும்** நான் நேரில் கண்டேன். நாங்கள் எல்லாரும் ஜெபித்து முடித்தோம். எல்லாரும் அவரவருக்கு கிடைத்த இடத்தில் படுத்துக்கொண்டோம். திரு. ரத்தினம் ஐயா வீட்டின் முன் இரண்டு பக்கமும் **தின்னை உண்டு.** அங்கும் சிலர் படுத்துக்கொண்டோம்.

ஜுன் 9ம் தேதி **விடியற்காலை** 41/2 மணிக்கு வீட்டின் உள்ளே பாடல் சத்தம் கேட்க வெளியே படுத்திருந்த நாங்கள் உடனே எழுந்து முகம் கழுவி காலை ஜெபத்தில் பங்கெடுத்தோம். உட்கார்ந்த இடத்திலேயே பால் இல்லாத (கட்டன் காப்பி) கொடுத்தார்கள்.

வெளியே ஆட்கள் சத்தம் கேட்டது உடனே உள்ளிருந்து **ரத்தினம்** தலைமை ஆசிரியர் வெளியே வந்து பார்த்துவிட்டு உங்கள் சாமான்களை எல்லாம் கழுதையின்மேல் ஏற்றுங்கள் என்றார். ஒரு மாத சாப்பாட்டிற்கு தேவையான அரிசி முதல் என்னென்ன சாமான்கள் வேண்டுமோ அதை ஏற்கனவே திட்டமிட்டு வாங்கி வைத்திருந்தார்கள். அதையெல்லாம் சாக்கு பையில் கட்டி வைத்திருந்தார்கள். சமையல் சாமான்களையெல்லாம் 3 கழுதையின்மேல் ஏற்றி தாமதமில்லாமல **சூரியன் உதிக்கும்** முன்பே பெரிய மலை நோக்கி பயனமானோம். சுமார் 3/4 மணி நேரம் நடந்து

**பெரிய மலை அடிவாரம்** வந்து சேர்ந்தோம். அப்போது தான் வானம் வெளுக்க ஆரம்பித்தது. கழுதைகளை ஓட்டிக்கொண்டு வந்த அந்த ஆட்கள் மலையின் மேல் ஏறத் தொடங்கினார்கள்.

## முதல் மிஷனரி பிரதிஷ்டை ஆராதனை

ஜெபம் தொடங்கும் முன்பே **சகோ. ஹில்டன்** அவர்கள் **தாழையுத்** சிமென்ட் கம்பெனி **சூப்ரவைசர்** பதவியை ராஜினாமா செய்து **மிஷனரியாக** தீர்மானித்து சகோ. P. சாம் அவர்களுக்கு அறிவித்திருந்நதார். பஸ் தாமதமானதல் **லாரியில் ஏறி** சரியான சமயத்துக்கு வந்து சேர்ந்தார். இப்போது **மிஷனரிகள் இரண்டு** பேர் 1) சகோ. **ஹாரீஸ் ஹில்டன்** 2) **Dr. புஷ்பராஜ் ஏசா** என்ற சகோதரனை **எங்களுக்கு உதவியாக** அனுப்பியிருக்கிறோம் என்று அங்கு அறிவித்தனர்.

எங்கள் 3 நபர்களையும் நடுவில் நிறுத்தி பிரதிஷ்டை ஆராதனை நடத்தினர். அப்போது அங்கு பங்குகொண்ட FMPB தலைவர்கள் Dr. Rev. **சாம் கமலேசன்,** சகோ. P.சாம், சகோ, **எமில் ஜெபசிங்**, சகோ, **சத்தியசிங்** அவர்களோடு **இன்னும் ஒருவர்** எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. இவர்கள் யாவரும் **எங்கள் தலைமேல் கைகளை** வைத்து ஜெபித்து உம்மை நம்பி **உம் கட்டளையின்படி** சுவிசேஷம் அறிவிக்க இவர்களை இந்த பயங்கர காட்டுக்குள் அனுப்பியிருக்கிறோம், ஆண்டவரே ! என்று ஜெபிக்க சிலர் அழுதார்கள். ஆனால் ஜெபித்த அத்தனை பேரும் மிகுந்த பாரத்தோடு ஜெபித்தார்கள் என்பது புரிந்தது. கடைசியாக **Dr.Rev. சாம் கமலேசன்** அவர்கள் ஜெபித்து **ஆசீர்வாதம்** கூறி முடித்தபின்தான் யாவரும் தங்கள் கைகளை எங்கள் தலையில் இருந்து எடுத்தார்கள்.

தாமதமில்லாமல் நாங்கள் அத்தனைபேரும் செங்குத்தான மலைமீது ஏறினோம். பகல் வந்தது. மலை ஏறி பழக்கமில்லாத நாங்கள் யாவரும் மூச்சு வாங்க உடல் முழுவதும் வியர்க்க, என்னை தவிர மற்ற யாவரும் தங்கள் சட்டையை கழற்றி தோழில் போட்டுக்கொண்டு பனியனுடன் நடந்தார்கள். பெரிய மலையில் எங்கள் பணிதளமான **பெட்டமுகுளாலம்** சென்றடைய சுமார் 1/2 மணி நேரம் ஆகும்போது சகோ. **ஹாரீஸ்** ஹில்டனுக்கு **இரத்தம்** மூக்கிலும், வாயிலும் காணப்பட்டது. நாங்கள் இருவர் மட்டும் ஒரு இடத்தில் உட்கார்ந்தோம். மற்றவர்கள வெகு தூரம் சென்றுவிட்டனர். சிறு முதலுதவி மட்டும் நான் **சகோதரன் ஹாரீஸ்** அவர்களுக்கு செய்து பிரதர் என்னிடம் **ஊசி மருந்து** எல்லாம் இருக்கிறது. அவைகள் யாவும் கழுதையின்மேல் ஏற்றி அனுப்பிவிட்டபடியால் பணித்தளம் சென்றடைந்தவுடன் அந்த குறிப்பிட்ட **இன்ஜக்ஷன்** கொடுக்கிறேன் என்று கூறி சிறு ஜெபம் செய்து புறப்பட்டோம்.

சகோதரன் ஹாரிஸ் ஹில்டன் அவர்களுக்கு நீண்டகால **ஆஸ்துமா** உண்டு. அது சாதாரண **ஆஸ்துமா** அல்ல, **கார்டியாக் ஆஸ்துமா** ஆனாலும் துணிந்து மிஷனரி பணிக்காக வந்துவிட்டார். பணிதளத்தின் குளிர்ந்த மலையின் சீதோஷ்ணம் அவர் உடம்புக்கு ஒத்துக்கொள்ள வில்லைதான். ஆனாலும் ஊழிய பாரத்தினால் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று துணிந்து ஊழியம் செய்தார். அதனால்தான் **கடைசிவரை மிஷனரியாக** தொடர்ந்து அந்த மலையில் **ஊழியம் அவரால் செய்ய முடிந்தது.**

சுமார் 11 மணிக்கு நாங்கள் யாவரும் **பெட்டமுகுலாளம்** என்ற இடம் வந்து சேர்ந்தோம். குடியிருக்க குடிசை தேடிய விவரம் இப்போது கூற இடம் இல்லை.

மேலே குறிப்பிட்ட சம்பவங்களை விளக்கக் காரணம். **Dr. Rev. சாம் கமலேசன்** உலக பிரசித்திபெற்ற பிரசங்கியார். FMPB மிஷனரி ஊழியத்தின் **ஸ்தாபகர்களில்** மிக

முக்கியமானவர். **பெத்தேல்** என்ற மிகப்பெரிய ஸ்தாபனம் உருவாக காரணமாக இருந்தவர். பெத்தேல் ஸ்தாபகர்ளில் ஒருவர் அன்று அந்த **பெரிய மலை** என்ற மலையின் செங்குத்தான இரண்டு பகுதிகளை கடந்து மலையேறி நடந்து வந்தார் என்றால் அவர் உள்ளத்தின் **மிஷனரி பாரம் எத்தனை பெரியது** என்பது விளங்கும்.

**கோவில்பட்டியில்** 5 பேராக சேர்ந்து **பாரத தேசத்துக்காக** ஜெபித்தபோது உள்ளத்தில் உண்டானது மஷனரி தரிசனம். இப்படி தரிசன பாரத்தோடு வருடக் கணக்காக ஜெபித்துக்கொண்டு, **ஜெபக்குழுக்களை மட்டும்** உருவாக்கினால் போதுமா ? **மிஷனரியாக செல்வது யார் ?** சென்றால் அல்லவா சுவிசேஷம் அறிவிக்க முடியும். **அறிவித்தால்** அல்லவா மக்களை **விக்கிரகங்களின் கையிலிருந்து பிரித்தெடுத்து கிறிஸ்துவின் சபை உருவாக்க முடியும். சபையை** அல்லவா இயேசு **மனவாட்டியாக அழைத்துப்போக இயேசு வருவார்.** இதற்கு ஆயத்தப்படுத்த **பல படிகளை கடக்கவேண்டுமே** என்று **பரிசுத்த ஆவியானவர்** ஜெபித்த இந்த 6 **நபர்களின்** உள்ளத்தை **அழுத்தினார்** என்று Dr. Rev. **சாம் கமலேசன் ஊழியர்கள்** கூட்டத்தில் கூறினார்.

**பெரிய மலையில்** அந்த **பெட்டமுகுளாளம்** என்ற இடத்தில் **பன்றிகள்** அடைத்து வைத்த **குடிசையில்** எங்கள் **மிஷனரி வீடாக** மாற்றி நாங்கள் சென்று அதை சுத்தம் செய்து அன்று **தொடங்கிய மிஷனரி** ஊழிய பணி இன்று **ஆலமரம்போல்** பரந்து விரிந்து **ஆசியாவிலேயே மிக அதிகம்** மிஷனரிகள் உள்ளடக்கிய மிகப் பெரிய **மிஷனரி ஸ்தாபனமாக** கம்பீரமாக நிற்கிறது என்றால் **Dr.Rev. சாம் கமலேசன்** அவர்களின் பெரும் முயற்சிதான் காரணம் என்றால் அது மிகையாகாது. **மிருகங்களுக்கு** வைத்தியம் பார்த்த மிருக டாக்டரை, **ஆறு அறிவுள்ள மனிதர்கள்** இயேசு இல்லாமல் சாகிறார்கள் **என்ற பாரத்தை** அவருள் உண்டாக்கி அவரை **திசை திருப்பி** FMPBயை **வருவாக்கினாரே** அப்படிப்பட்ட அவரை நினைவு கூறும் வகையில் அவர் மரணத்தை நினைவு கூறும் இந்நாட்களில் டாக்டர் புஷ்பராஜ் ஆகிய நான் அவரோடு பழகிய அனுபவத்தை விளக்க ஆசைப்பட்டேன்.

## பெத்தேல் ஆஸ்பத்திரி

டேனிஷ்பேட்டையில் பெத்தேல் ஐக்கியத்தின் ஸ்தாபகரான Dr. Rev. **சாம் கமலேசன்** அவர் உள்ளத்தில் **பெத்தேலில்** CMCஐ போல் **ஒரு பெரிய ஆஸ்பத்திரி** கட்ட வேண்டும் என்பது அவரின் ஊழிய பாரங்களில் ஒன்றாகும். அதை **சகோ. P. சாம்** அவர்களிடம் பகிர்ந்து கொள்ள உடனே **சின்ன வரைப்படம் தயாரித்து** சகோ. P. சாம் அவர்களுக்கு அனுப்ப உடனே சகோ. P. சாம் அவர்கள் **அஸ்திபார பணியை** தொடங்கிவிட்டார்.

அஸ்திபாரம் போடப்பட்டபின் ஒருமுறை Dr. Rev. கமலேசன் அவர்கள் சென்னையி லிருந்து சில முக்கிய பிரமுகர்களோடு **டேனிஷ்பேட்டை** வந்து சேர்ந்தார். நான் யதேச்சையாக பெத்தேல் வந்திருந்தேன். அந்த அஸ்திபாரம் போடப்பட்ட இடத்தில் சகோ. P. சாம், Dr. Rev. சாம் கமலேசன் இன்னும் இரண்டு பேர் நிற்க அவர்கள் பின்னால் நானும் கொஞ்ஜம் விலகி நின்றேன். அப்போது அவர்கள் ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். அந்த ஜெபத்தில் **Dr. Rev. சாம் கமலேசனின்** பாரம் விளங்கியது. கர்த்தாவே உம்மை நோக்கி கை விரிக்கிறோம். **சுற்று வட்டார கிராம மக்கள்,** வியாதியஸ்தரை ஒவ்வொரு முறையும் **கட்டிலில்** அல்லது **ஏணியில்** சுமந்து சேலம் அரசாங்க ஆஸ்பத்திரிக்கு தூக்கி சிகிச்சையளிக்க கஷ்டப்படுகிறார்கள். நாங்கள் நிற்கும் இந்த இடம் ஒரு

வெல்லூர் CMC போன்ற **சகல வைத்திய வசதியுள்ள** ஒரு ஆஸ்பத்திரியாக உருவாக வேண்டும், என்று ஆசைப்பட்டு இந்த சின்ன ஆஸ்பத்திரிக்கு அஸ்திபாரம் இட்டிருக்கிறோம். **உம்முடைய பாரத்தை** எங்கள் உள்ளத்தில் நீர் வைத்தபடியால் கெஞ்ஜிகிறோம். **பாரத்தை கொடுத்த** நீர் இதன் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். சீக்கிரமே ஆஸ்பத்திரி எழும்பட்டும் என்று ஆங்கிலத்தில ஜெபித்து முடித்தார்.

சில மாதங்களிலேயே பெத்தேல் ஆஸ்பத்திரி கட்டிடம் வளர்ந்து ஆஸ்பத்திரியும் உருவாகிவிட்டது. இந்த ஆஸ்பத்திரி ஆரம்பிக்கும் முன்பே நான் 1976ம் வருடம் பெத்தேலிருந்து நான் விலகிவிட்டேன்.

Dr. Rev. **சாம் கமலேசன்,** சகோ. **P. சாம்** ஆசைப்பட்டதுபோல ஆஸ்பத்திரி உருவானது. வியாதியஸ்தர் படுக்க **கட்டில்கள்,** நர்ஸ்கள், **டாக்டர்கள்,** கேன்டீன்கள் யாவும் உருவாகின.

நல்ல **நல்ல டாக்டர்கள்** அங்கு பணி செய்தனர். ஆனால் வரவர **நிர்வாகம் சீர்கெட்டுப் போனது. நிர்வாகிகளுக்கும்** டாக்டர்களுக்கும் **அபிப்ராய வித்தியாசமும்** வாக்குவாதங்களும் உண்டாக **கிறிஸ்தவ அன்பு** நீங்கிவிட்டது. **தெய்வ பிரசன்னமும் பெத்தேலை விட்டும் பெத்தேல் ஆஸ்பத்திரியை விட்டும் நீங்கிபோனது.**

பெத்தேல் ஆனாதை பிள்ளைகளை வேறு ஊர்களுக்கு கொண்டுபோய் விட்டார்கள். நன்றாக நடந்துகொண்டிருந்த **பைபிள் காலேஜ்** மூடப்பட்டது. இத்தனைக்கும் Dr. **Rev.சாம்கமலேசன் அவர்கள் உயிரோடு இருக்கும்போதே** இந்த **அவலங்கள் அரங்கேறின.**

**சேலத்திலிருந்து** பெத்தேல் வந்துபோன **மிகச் சிறந்த சர்ஜன்கள்**, டாக்டர்கள் 3 பேர் 5 வருட இடைவெளியில் **ஒருவர் பின் ஒருவராக கார் விபத்திலும் ரயிலிலும்** அடிப்பட்டு இறந்து போனார்கள். **இந்த மரணங்கள்** அடுதடுத்து **சில வருட இடைவெளியில்** நடந்ததால் **புதிய டாக்டர்கள்** யாரும் பெத்தேல் ஆஸ்பத்திரிக்கு வர பயப்பட்டார்கள்.

காரணம் **இக்கபோத்** – இஸ்ரவேல் மத்தியில் இருந்த **தேவ பிரசன்னம்** நீங்கி போய்விட்டது என்று அர்த்தம். அதை போலதான் இன்று **பெத்தேலிலும், பெத்தேல் ஆஸ்பத்திரியிலும் தேவ பிரசன்னம்** நீங்கிபோன நிலையில் ஒன்றும் இல்லாமல் போனது.

எத்தனை ஆயிரம் பேர் இரட்சிக்கப்பட **காரணமான பூமி** பல ஆயிரம் உலக பிரசங்கிமார்களை உருவாக்கின பூமி – அதில் நானும் ஒருவன், என்னை மனம் திரும்ப வைத்து என்னையும் **உலக பிரசங்கியாக்கின** பூமி இது. அதனால்தான் நான் மிகுந்த **மனவேதனையோடு** இதை எழுதுகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன் **பெத்தேல் ஆஸ்பத்திரி சென்றேன்.** ஆஸ்பத்திரியை **வார்டுகளை** ஆப்பரேஷன் தியேட்டர்களை சுற்றி பார்த்தேன். **ஒரு வியாதியஸ்தனும்** இல்லை. **படுக்கையும்** இல்லை. அங்கு **கட்டில்களும்** இல்லை. எல்லா கட்டில்களும் **ஒன்றன்மேல் ஒன்றாக கவிழத்தும் நிமிர்த்தியும்** வைத்திருப்பதையும் அவைகள் துருபிடித்த நிலையில் இருப்பதையும் பார்க்கும்போது **மனம் மிகவும் வேதனையுற்றது.** அன்று அந்த கட்டிடம் எழும்பும்முன் அதன் அஸ்திபாரத்தில் நின்று ஜெபித்த அந்த **தேவ மனிதர்களின்** ஜெபம் இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இன்று இரண்டே **இரண்டு டாக்டர்கள்** மட்டும் பணியாற்றுகிறார்கள். **வேலையாட்கள்** நிறுத்தப்பட்டனர். படித்த நர்ஸ்மார்கள இல்லை. ஒரே ஒரு டாக்டருக்கு கிடைக்கும் வருமானத்தில் வேலையாட்களுக்கு சம்பளம் அல்லது கூலி கொடுக்க முடிகிறது. மற்ற டாக்டருக்கு வருமானம் குறைவு. இதில் ஒரு **டாக்டர்** மிகவும் பக்தியுள்ளவர். பாவம் அவர்தான் இரவும், பகலும் பெத்தேலிலேயே தங்கி வியாதிஸ்தரை கவனிக்க வேண்டியுள்ளது. MD படிப்பு **முழுமைபெரும்** கடைசி நிலையில் குடும்ப காரணமாக பெத்தேலுக்குகே திரும்பி வந்துவிட்டார். திருமணமும் செய்யாமல் தன்னை முழுவதுமாக **ஆஸ்பத்திரிக்காகவும்** அதன் மூலம் **ஒரு சில ஆத்துமாக்களுக்காகவது** தான் **பயன்படமாட்டோமா** என்ற பாரத்தில் இன்றும் அதே பெத்தேலில் அவர் பணி புரிகிறார். கர்த்தர் அதற்கான பலனை நிச்சயம் அவருக்கு அருளுவார்.

டாக்டர்களுக்கு 3 மாத சம்பள பாக்கி. இப்போது ஓரளவு சரிசெய்து விட்டனர். ஆனாலும் . . . . . . . **கிறிஸ்தவ நிர்வாகத்தை** பார்த்திருக்கிறீர்களா? இத்தனைக்கும் **Dr. Rev. சாம் கமலேசன்** உயிரோடு இருக்கும்போதே **பெத்தேலும், பண்ணையும், பெத்தேல் ஆஸ்பத்திரியும்** ஊரில், சுற்றுவட்டாரத்தில் மக்களிடத்தில் மதிப்பை இழந்தது.

## மரித்த Dr. Rev. சாம் கமலேசன் அவர்களின் இரண்டு பெரும் தரிசனம்

(1) இந்தியா இயேசுவை அறிய வேண்டும். மிஷனரிகளை உருவாக்க வேண்டும். இந்தியா எங்கும் திருச்சபைகள் ஸ்தாபிக்க வேண்டும். குறிப்பாக மக்களை கானாத ஆதிவாசிகள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும். இந்த விஷயத்தில் மட்டும் OO சாம் கமலேசனின் தரிசனம், பாரம் ஆகியவைகள் FMPB மூலம் நிறைவேறியது. நிறைவேறிக்கொண்டிருக்கிறது . கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

(2) பெத்தேல் விவசாய பண்ணையும், ஆனாதை பிள்ளைகளின் வளர்ப்பு அவர்களுக்கான உயர் படிப்பு, அதற்கான பள்ளி கட்டிடங்கள், தொழில்கல்வி, CMC Hospital போன்ற சகல சிகிச்சை கருவிகளோடு மிகச் சிறந்த ஆஸ்பத்திலி ஒன்று உருவாக்க வேண்டும். இலவச சிகிச்சை, இலவச ஆபரேசன், சிறந்த டாக்டர்கள் ஆகிய இந்த தரிசனம் மட்டும் துரித வேகத்தில் துடங்கி அவரை சந்தோஷப்படுத்தியது. ஆனால் அதே வேகத்தில் பெத்தேல் ஆஸ்பத்திரியின் கனவும், தரிசனமும் கரைந்து போனது. மரிக்கும்போதும் தான் ஆசைப்பட்ட பெத்தேல் பண்ணை – அதை சார்ந்த கல்வி, ஆஸ்பத்திரி யாவும் உருக்குலைந்து போனதே என்ற ஏக்கத்தோடுதான் அவர் மரித்திருப்பார். **முதல்** தரிசனம் நிறைவேறியது. **இரண்டாம்** தரிசனம் தகர்ந்து போனது.

Dr. Rev. கமலேசன் & P. சாம் அவர்களின் ஆஸ்பத்திரியை பற்றிய **தரிசனம்** நிறைவேறவில்லை. இவர்களுக்கு ஏற்கனவே உதவி செய்த ஸ்தாபனங்கள் **ஸ்விஸ்** நாட்டிலும், ஹாலந்து, **ஆஸ்ட்ரேலியா** நாடுகளிலிருந்து பணம் அனுப்ப தயாராக இருக்கிறது. ஆனால் **ஆஸ்பத்திரியை** Upgrade செய்வதற்கு **தகுந்த திட்டமோ,** ஆஸ்பத்திரியை **புதுபிக்கும்** எண்ணமோ பெத்தேல் பொருப்பாளர்களுக்கு இருப்பதுபோல தெரியவில்லை. அதுமட்டுமல்ல பெத்தேல் ஆஸ்பத்திரியையே மூடிவிடும் ஆலோசனைகள் ஓடிக்கொண்டிருப்பதாக அறிகிறேன்.

☐ Dr. புஷ்பராஜ் ஆகிய எனக்கும் Dr. Rev. சாம் கமலேசன் அவர்களோடு எனக்கு ஏற்பட்ட நேரடி அனுபவங்களை மட்டும் அவருடைய மரணத்தை நினைவுகூறும் சமயத்தில் வாசகர்களுக்காக இவைகளை பகிர்ந்துகொள்கிறேன்.

Dr. Rev. சாம் கமலேசன் அவர்கள் அமெரிக்காவில் **தலையில் அடிபட்டு** ஞாபகசக்தியிழந்த நாட்களில் அவர் காப்பாற்றப்பட்டதும் அவர் **மனைவி** மரித்த சமயம் அவர் தாங்க முடியாத **மனவேதனையில்** இருந்தபோது கர்த்தர் **அவரையும்** அவர் **மகளையும்** ஆறுதல் படுத்திய விதம் Dr. Rev. சாம் கமலேசன் **வாயில் வார்த்தைகள்** வராத சமயத்தில் அவரை **பேச வைக்க** செய்யப்பட்ட Speach Therapy வைத்தியமும் **பேச ஆரம்பித்ததும்** உடனே இந்தியா போய் நான் பிரசங்கிக்கவேண்டும் என்று டாக்டர்களிடம் அவர் பிடிவாதம் செய்து கேட்டதும். **தலையில்** அடிப்பட்டதால் 28 மணி நேர நீண்ட **விமான பயனம்** உங்களுக்கு **நல்லதல்ல,** எந்த நேரத்திலும் **ஜன்னி** Fits வரலாம் என்று எச்சரித்ததும், முதல்முதல் ஞாபகசக்தி திரும்பபெற்றபின் **அமெரிக்க பாஸ்டர்** அவரை ஜெபிக்க அனுமதித்து அவர் எப்படி **திக்காமல், ஞாபகசக்தி இழக்காமல்** இருக்கிறாரா என்று சோதிக்க உதவி செய்த அந்த நல்ல பாஸ்டரின் முயற்சி, அந்த ஆலயத்தில் **10 நிமிடம் பிரசங்கம்** செய்ய வைத்து பரிசோதித்தது ஆகிய நிகழ்ச்சிகள் யாவும் கர்த்தரின் **மகா கிருபையாகும்.** அந்த கிருபை பெருகி அவருடைய வைராக்கியத்தை கர்த்தர் கணப்படுத்தினார். அதே கிருபைதான் மறுபடியும் அவரை இந்தியாவுக்கு அழைத்து வந்ததது. இந்தியாவில் **40 வருடம் பிரசங்கித்ததும்** குறிப்பாக **சத்திய வசனத்துக்காக** TV **நிகழ்ச்சியில் செய்திகொடுத்தது** அத்தனையும் **அற்புதங்களாகும்.** அவைகளை இப்போது விவரிக்க நேரம் இல்லை. Dr. Rev. சாம் கமலேசனின் அற்புதமான ஆவிக்குரிய வாழ்க்கையும் இந்தியாவில் NMS மிஷனரி ஸ்தாபனத்துக்கு பிறகு மிகப் பெரிய மிஷனரி ஸ்தாபனமாக FMPB யை உருவாக்க Dr. Rev. கமலேசனை அவர்களை உபயோகித்த கர்த்தரை துதித்து முடிக்கிறேன்.

– டாக்டர் **புஷ்பராஜ்**


**STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER JAMAKKARAN (FORM IV)**

| | | |
|---|---|---|
| 1. Title of the news paper | : | **JAMAKKARAN** |
| 2. Language(s) in which it is published | : | **TAMIL / MALAYALAM** |
| 3. Place of publication | : | 89,Majeeth Street,<br>Old Suramangalam, Salem - 636 005. |
| 4. Periodicity of its publication | : | Monthly |
| 5. Printer's name | : | M.Velu |
| (whether citizen of India) | : | Indian |
| Address | : | P.M.Press<br>168,Arumuga Nagar, Salem-636 005 |
| 6. Publisher & Editor's name | : | **Dr.M.G.E.PUSHPARAJ** |
| (whether citizen of India) | : | Indian |
| address | | 89,Majeeth Street, Old Suramangalam. Salem-636005 |

I, **Dr. M.G.E.PUSHPARAJ** *hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

Dated : 1- 4-2021
Salem - 636 005

**(Sd.) Dr. M.G.E.PUSHPARAJ**
*Signature of Publisher & Editor*

## வசனத்தில் வளர்ந்துவிட்டவர்கள் சுகமளிக்கும் கூட்டங்களில் பங்குபெற வேண்டாம்

– ஜாமக்காரன்

நீங்கள் அளவுக்கு மீறி **சுகமாளிப்புக் கூட்டங்களில்** பங்குபெற்று அளவுக்கு மீறி **சுகமளிப்புப் பத்திரிகைகளைப்** படித்துவந்தால் **பூமிக்கடுத்த சிந்தனை, பொருளாசை, குறுகிய பார்வை, தன்னலம்** ஆகிய நோய்களினால் பாதிக்கப்பட்டு **சீக்கிரம் மரித்துவிடுவீர்கள். சுகமளிப்பு கூட்டம் ஒன்றில் பங்குபெற்றால்** குறைந்தது **6 மிஷனரி கூட்டங்களிலாவது** பங்குபெருங்கள். அப்படியே **ஒரு சுகமளிப்பு பத்திரிகை** வாசித்தால் குறைந்தது **6 மிஷனரி பத்திரிகையாவது வாசியுங்கள்** என்று ஆலோசனை கூறுகிறேன். கர்த்தரது ஜெபத்திலுள்ள 7 விண்ணப்பங்களில் **ஒன்றே ஒன்றுதான்** சரீரத் தேவையை அடுத்ததென அறீவீர்களா ?

Vellore (BYM) R. **ஸ்டான்லி**

**MARCH-2021**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.